
# அமிர்தவசனி

தெய்வீக மாதப் பத்திரிகை


| | | |
|---|---|---|
| மலர்: 9<br>இதழ்: 10<br>விலை 25 ந.பை | ஹேவிளம்பி ௵ தை மீ<br>ஜனவரி—பிப்ரவரி '58 | வருட<br>சந்தா<br>ரூ. 2-4-0 |


Page - 469 - ACC No 18582



ACC. NO. 18582.

அன்பின் பெருக்கால் கல்லை மலராக் கருதி எறிந்து,
சங்கரனை வழிபட்ட சாக்கிய நாயனர்

பெரியபுராணச் சித்திர விளக்கம் 46; பக்கம் 435

## உள்பொருள்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. வர்ணமும் வண்ணமும் | (திருப்புகழ் மணி) | ... | 433 |
| 2. சாக்கிய நாயனார் | (கி. வா. ஜகந்நாதன்) | ... | 435 |
| 3. திருவான்மியூர் திருப்புகழ் விரிவுரை | (குகஸ்ரீ) | ... | 437 |
| 4. முனிவர் காட்டிய முதல்வன் | (சி. குமாரஸ்வாமி) | ... | 444 |
| 5. கீதை காட்டும் பாதை | (அ. ராமமூர்த்தி) | ... | 449 |
| 6. கண்ணாடி | (V. R. G.) | ... | 452 |
| 7. உபநிஷதங்களின் உள்ளொளி | (சிவானந்த விஜயலக்ஷ்மி) | ... | 456 |
| 8. ஆறுபடை வீடுகளின் தத்துவ அமைதி | (திருப்புகழ் சதுரர் சே.த. ராமலிங்கம் பிள்ளை B.A.B.T.) | ... | 463 |
| 9. இராமசுனார் | (ரஸபதி) | ... | 467 |
| 10. Spirituality | *(Thiruppugal Mani)* | ... | 479 |


---


### அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்

சித்திரை மீ முதல் பங்குனி மீ முடிய வருடச் சந்தா உள் நாட்டிற்கு ரூ. 2—4—0 (2-25) முன்னதாக அனுப்பவும். வி. பி. இல்லை.

இலங்கைக்கு நான்கு வருடச் சந்தா வி. பி. தபால் செலவு உள்பட ரூ. 10—0—0.

மலேயா, ஆப்பிரிக்கா, மற்ற நாடுகளுக்கு நான்கு வருட சந்தா இருபது ஷில்லிங்குகள். போஸ்டல் ஆர்டராக அனுப்பவும்.

சித்திரை மாதத்திற்கு முன்னதாகவே சந்தாத் தொகையை அனுப்பினால் தொடர்ந்து பத்திரிகை கிடைக்கும். வருட நடுவில் சந்தாச் செலுத்தினால், சித்திரைமீ முதல் வந்த முன் இதழ்கள் கிடைக்கக் கூடியதை உத்தேசித்து சந்தாத் தொகையை பெற்றுக் கொள்ளவோ, மறுக்கவோ நேரும்.

**அமிர்தவசனி 54, பந்தர் தெரு, சென்னை.**

---

குறிப்பு: முந்திய இதழ்களின் வருடத் தொகுப்புகள் 3—6—0 விதம் கிடைக்கும். சில பிரதிகளே கைவசம் உள. தபால் செலவு ரூ. 1

அமிர்தவசனி
தெய்வீக மாதப்பத்திரிகை

ஆசிரியர். சு. முத்துஸ்வாமி

| | | |
|---|---|---|
| மலர் 9 | ஹேவிளம்பி ஞூ தை மீ<br>ஜனவரி-பிப்ரவரி—1958 | இதழ் 10 |


# வர்ணமும் வண்ணமும்

(திருப்புகழ்மணி)

அகத்தின் தியாகம் ஜகத்தின் வாழ்வு. அகத்தின் வாழ்வே ஜகத்தின் தியாகம். ஆசா பாச காமக் குரோ தங்கள் அகத்தின் ஆயுதங்கள். இவ்வாறு தங்களால் ஜகத்தைக் கொல்லாத, ஏன்? கொல்லாமை நன்று. என்றும் கொல்லாமை நன்று. ஆசா பாச காம குரோ தங்கள் மானிடக் காடுகளில் திரிந்து நன் மக்களை வதம் செய்து தீங்கிழைக்கும் விலங்குகள், காட்டு மிரு கங்கள். அவற்றை நீ வதைத்திடுவது நன்று. இல்லை யேல் அவை உன்னை வதைத்துவிடும். நீ உய்ய வேண்டுமானல், வேடனுனல் ஒழிய உனக்குக் கதி யில்லை. நல்லதோர் வேடர் குலத்தில் பிறந்து, ஆற்ற லுடைய வேடனுனல், உன் அன்பிற்கும் ஆனந்தத் திற்கும் இசைந்த உன் மனப் பெண்ணை மணந்திடவே முருகன் ஓடி வருவான். இதனுலன்றே, "வனசரர் ஆதார மாகிய பெருமாளே" என்று அருணகிரியார் போற்றினர்.

காட்டு விலங்குகளை ஓட்டி, வனப் புதர்களைத் தினைப் புனமாக்கி, ஷண்முகானுபவம் என்னும் சிவ

---

கண்ணுனன் அன்னை கருத்தானுர் தந்தை
எண்ணுனன் அன்னவரில் எம்மானென் றோர்ந்தேனே.

யோக விவசாயம் செய்து முருகானந்தப் பயிர் விளை வித்தால், வேடன் நீ போற்றும் உருவம் கொண்டு, அற்புதமாக ஒரு வேடன் வேலும் கையுமாய் வந்து ஆட்கொள்ளுவான். முருகனை நீ நாடிப் பாடிப் போற்றுவாயாக. பிரம்மத்தைக் காண ஸ்வரூப விசாரம் செய்யுங்கால் பிரம்ம விசாரியாவாய்.

ஆசாபாச காமக் குரோதாதிகளை அடித்து வீழ்த்துங் கால் நீ சிறந்த வீர க்ஷத்திரியனுவாய்.

சிவயோகப் பயிற்சி செய்து அறுப்பு அறுத்து விவ சாயப் பயிற்சி செய்யுங்கால் வைசியனுவாய்.

அறுப்பறுத்துச் சேமித்து சிவபோக தானியங்களை மற்ற ஜீவராசிகளுக்கு அவர்கள் மனம் உவப்பக் கொடுத்து நீ களிக்குங்கால் சிறந்த சூத்திரனுவாய்.

மற்ற ஜீவராசிகளுக்கே உடலைக் கொடுத்து உல கத்தை ரக்ஷிக்க வேண்டுமென்ற தீர்மானமாகிய ஸூத் திரத்தைக் கைகொண்டவர்கள் சூத்திரர்களல்ல, ஸூத் திரர்கள் ஆவார்கள்.

இந்த நால்வகையான வர்ணங்களை ஒரே வகையி லிருந்து அனுபவித்து ஆட்படும் வாழ்வே தணிகை மலை ஆண்டவன் வாழ்வு, வள்ளியின் வாழ்வு, பெரு வாழ்வு, யாம் வேண்டும் வாழ்வு. இந்த வர்ணம் ஈசன் வண்ணம்; அப்பர் போற்றும் வண்ணம்.

"விரும்பும் வண்ணமும் வேதத்தின் வண்ணமும்
கரும்பின் இன்மொழிக் காரிகை வண்ணமும்
விரும்பு வார்வினை தீர்த்திடும் வண்ணமும்
அரும்பும் வண்ணமும் ஆளர் ஐயாறரே.

---

மண்ணில் எனை வளர்க்க மாமுதலே இவ்வுருவா
எண்ணிவந்ததென்றேயான்எண்ணுவதும்கொண்டேனே

# சாக்கிய நாயனார்

(கி. வா. ஜ.)

சங்கமங்கை என்னும் ஊரில் வேளாளர் குலத்தில் தோன்றிய சிவனடியார் சாக்கிய நாயனார். அவர் காஞ்சீபுரம் சென்று அங்குள்ள பௌத்தர்களோடு பழகிச் சாக்கிய தர்மத்தையே மேற்கொண்டார். பின்னும் பல சமய நூல்களையும் ஆராய்ந்து பார்த்து சிவநெறியே நல்ல இன்பம் பெறுவதற்கு ஏற்ற வழியென்று தெளிந்தார். சிவபெருமானிடம் அவருக்கு அன்பு தோன்றி வளர்ந்து வந்தது. பௌத்த வேடத்தில் இருந்தாலும் அவர் உள்ளம் சிவபெருமான் உறையும் கோயிலாகியது.

நாள்தோறும் சிவலிங்க தரிசனம் செய்து பிறகே உண்ணவேண்டும் என்ற வரத்தை அவர் மேற்கொண்டார். சாக்கிய வேடத்தில் இருந்த அவர் திருக்கோயிலில் புக யாரும் உடம்படார். தம்முடைய விரதம் நிறைவேற வழியின்றித் தவித்த அவருக்கும் பரந்த வெளியொன்றில் பூசையின்றிக் கிடந்த ஒரு சிவலிங்கம் நேர்பட்டது. அதைக் கண்டவுடன் அவருக்கு உண்டான ஆனந்தத்துக்கு அளவில்லை. 'புறத்தில் சாக்கியனாகவும் அகத்தில் சைவனாகவும் இருக்கும் நமக்கு ஏற்ற வகையில் இந்தப் பெருமான் கிடைத்தாரே! இது அவன் திருவருளே' என்று உணர்ச்சி விஞ்சியவராய்ச் சிவலிங்கத்தை அணுகினார். அருச்சனை செய்ய வேண்டும் என்ற எண்ணம் உதித்தது. வெறும் வெளியில் நீரா, பூவா, இலையா, ஒன்றும் கிடைக்க வில்லை. அருகிலே இருந்த சிறு கல்லை எடுத்து அதையே மலராகப் பாவித்து எறிந்தார்.

தன்னைவிட்டுச் சென்ற குழந்தை வந்து இகழ்வதற்குரிய செயலைச் செய்தாலும் அதனைப் பொருட் படுத்தாது தாய் அக் குழந்தைக்கு இன்பம் செய்வது போலச் சிவபெருமான் சாக்கியர் அன்பைக் கண்டு திருவுள்ளம் உவந்தான்.

---

ஆதிப் பரம்பொருளே அம்மையப்ப னென்றாகி
ஓது கலையனைத்தும் ஓதுவிப்ப தோர்ந்தேனே

மறுநாளும் அவர் அவ்விடம் வந்து சிவலிங்கப் பெருமானைத் தரிசித்தார். முதல் நாள் தமக்கு அப்பெருமான் கிடைத்த உவகைப் பெருக்கில் கல்லையே மலராக வீசி எறிந்த செயலை நினைந்து பார்த்தார். 'இதுவும் சிவபெருமானுடைய ஆணையினால் நிகழ்ந்ததுபோலும்! அந்த எண்ணம் தோன்றியதற்கு வேறு காரணம் இல்லை. புறச் சமயத்துக்குரிய வேடம் புனைந்திருக்கும் நான் மலரால் பூசை செய்தால் அயலார் என்னை ஏசுவார்கள். கல் எறிந்தால் புறச் சமயத்தான் வெறுப்பினால் செய்வது என்று எண்ணிக்கொள்வார்கள். நம்மைத் தவறு சொல்ல மாட்டார்கள். இதனால்தான் இப்படி ஓர் எண்ணத்தை எம்பெருமான் எனக்குத் தோன்றச் செய்தான்' என்று சிந்தித்தார். ஆகவே அன்றும் சிறு கற்களை எடுத்து அந்தச் சிவலிங்கத்தின்மேல் வீசி எறிந்துவிட்டுச் சென்றார். அது முதல் ஒவ்வொரு நாளும் உண்ணுவதற்கு முன் மறவாமல் அந்த வெளியிலிருந்த சிவபிரான்மேல் கல்லை எறிந்து பின்பே உண்ணுவார். இந்த விரதத்துக்கு இழுக்கு வராமல் ஒழுகி வந்தார்.

ஒருநாள் - இறைவன் திருவருள் நியதிபோலும்-அவர் இந்த ஒழுங்கை மறந்துபோய் உணவுகொள்ள உட்கார்ந்து விட்டார். அப்போது பளிச்சென்று கல்லருச்சனை நினைவுக்கு வந்தது. "ஐயோ! என்ன காரியம் செய்யப் புகுந்தேன்! இன்று எம்பெருமான்மேல் கல்லை வீச மறந்துபோய் விட்டேனே!' என்று நைந்து எழுந்து அன்பு உந்த மிக்க விரைவாக சிவலிங்கத்தை நோக்கிப் புறப்பட்டார்.

சிவலிங்கப் பெருமானிடம் ஆராத காதல் கொண்டு ஓடினவர் வழக்கம்போல் ஒரு கல்லை எடுத்து வீசினார். தாம் மேற்கொண்ட விரதத்தினின்றும் வழுவாது அன்பிலே சிறந்து நிற்கும் சாக்கிய நாயனாரின் உள்ளப் பண்பை அறிந்த எம்பெருமான் விடையின் மேல் உமாதேவியாரோடும் எழுந்தருளிக் காட்சி கொடுத்தார்.

இடைவிடாது உள்ளக் கோயிலில் எம்பெருமானை வைத்து இறைஞ்சும் சாக்கிய நாயனாருக்கு இறைவன்

---

**முற்றுமுணர் கேள்வி முதலறத்தைக் காட்ட,எனைப்**
**பற்றும் அறியாமை பறிமுதலாப் போனதுவே**

சிவலோகத்தில் மீளா அடிமையாக நிற்கும் பாங்கை அருளி ஆட்கொண்டார்.

தாம்மேற்கொண்ட செயல் தம் நிலைக்கு ஏற்றதென்று அதை விரதமாகக் கடைப்பிடித்த சாக்கிய நாயனருடைய செயல் வியப்பதற்குரியது. அவர் உள்ளத்தே அன்பு நிறைந்திருந்தமையால் அவர் எறிந்த கல் இறைவனுக்கு மணமலர் ஆயிற்று. புறச் செயலைக் காட்டிலும் உள்ளன்பே எம்பெருமானுடைய திருவருளைப் பெறுவதற்கு உரிய கருவி என்பதைச் சாக்கிய நாயனர் வரலாறு காட்டுகிறது.

---

# திருவான்மியூர் திருப்புகழ்

## விரிவுரை

(குகஸ்ரீ)

குசமாகி யாருமலை மரைமாநுண் ணூலினிடை
குடிலான ஆல்வயிறு குழையூடே
குறிபோகும் மீனவிழி மதிமாமு காருமலர்
குழல்கார தானகுணம் இலிமாதர்
புசஆசை யால்மனது உலைநாடி டாதபடி
புலையேனு லாவிமிகு புணர்வாகிப்
புகழான பூமிமிசை மடிவாய் இருதவகை
பொலிவான பாதமர் அருள்வாயே;
நிசநார ணுதிதிரு மருகாஉ லாசமிகு
நிகழ்போதம் ஆனபர முருகோனே!
நிதிஞான போதமரன் இருகாதி லேஉதவு
நிபுண!நி சாசரர்கள் குலகாலா!
திசைமாமு காழியரி மகவான்மு னோர்கள்பணி
சிவநாதர் ஆலமயில் அமுதேசர்
திகழ்பால! மாகமுற மணிமாளி மாடமுயர்
திருவான்மி யூர்மருவு பெருமாளே!

---

ஆண்பாலும் பெண்பாலும் அஃறிணையாம் பால்பலவும்
மாண்பார் மயிலிறையா மன்னுவதும் கண்டேனே

(நிச.........! உலாசா !)

**(பதவுரை)** *நிச நாரண ஆதி திரு மருகா -மெய்ம் முதலான நாரணருடைய (மாபெரும்) சிறந்த மருமகனே !;*

*உலாச - பொலியும் இன்ப உணர்வு, பொங்கும் தோற்றம் கொண்டவனே !;*

(மிகு.......... முருகோனே !)

*மிகு நிகழ் போதம் ஆன பர முருகோனே - மிக்கு விளங்கிய தெளிவில் தங்கிய ஓம் உருவான முருகபரனே !;*

(நிதி ..........நிபுண !)

*நிதி ஞானபோதம் அரன் இரு காதிலே உதவு நிபுண - தேர்ந்த தெளிவில் (நேர்ந்த ஓம்) பொருளை, சிவனார் இரு திருச்செவிகளில் பிரியத்துடன் உபதேசிக்கும் பேராற்றல் பெற்றவனே !*

(நிசா...... ....காலா !)

*நிசாசரர்கள் குல காலா - இருளில் நடமாடும் அவுணர் (அறிவின்) பெருக்கை அழிக்கும் இயமன் ஆனவனே !;*

(திசை...........திகழ்பால !)

*திசை மாமுக - நான்கு திசை நோக்கும் சிறந்த நான் முகனும் ;*

*ஆழி அரி - திரு ஆழி (யை ஏந்தித் தேராரை அடர்க்கும்) திருமாலும் ;*

(மகவான்...... ....அமுதேசர்...பாலா !)

*மகவான் முனோர்கள் பணி சிவநாதர் - இந்திரன் முதலினோர் வழிபாட்டை ஏற்ற (சிறந்த) நாதரான சிவ பிரானும் ;*

*ஆலம் அயில் அமுதேசர் திகழ்பால - (பயங்கர) விடம் பருகிய அமுத சொருபருமான அச் செல்வரது பிரகாசமான பிள்ளையே !*

(மாகமுற...........மருவு பெருமாளே !)

---

**உள்ளம் உருக உழுவலன்புப் பிள்ளைகளின்**
**கள்ளமகல் நோக்கில் கடவுளறம் கண்டேனே**

*மாகம் உற மணி மாளி மாடம் உயர்* - விண்ணளாவிய அழகான மாட மாளிகைகள் உயர்ந்த ;

*திருவான்மியூர் மருவு பெருமாளே* - திருவான்மியூர்த் தலத்தில் (அத்துவிதமாக) எழுந்தருளி யிருக்கும் பெருமை யிற் சிறந்த பிரானே !

(குச..........புச ஆசையால்)

*குசம் ஆகி ஆரும் மலை* - மலைபோல் பருத்த மாபெரும் தனங்களும் ;

*மரை மா நுண் நூலின் இடை* - தாமரையின் அழகிய நுண்மை நூல்போல் நுணுகிய இடையும் ;

*குடில் ஆன ஆல் வயிறு* - (ஆன்மா தங்கும்) அல்ப இருப்பிடம் ஆன ஆல் இலை (போன்ற) வயிறும் ;

*குழை ஊடே குறி போகும் மீன விழி* - (செவியணி யான) குழையின் நடுவிடம் குறித்துச் செல்லும் கயல் மீன் போன்ற கண்களும் ;

*மா மதி முக* - நிறை மதி போன்ற முகமும் ;

*ஆரும் மலர் கார் அது ஆன குழல்* - மலர் செறிந்திருக் கும் கருமுகில் போன்ற கூந்தலும் உடைய ;

*குணம் இலி மாதர் புச ஆசையால்* - பெருமித குணம் இல்லாத பேதை மாதர்களின், இனிய தோள்களைத் தழுவும் இச்சையினால் ;

(மனது..........புணர்வாகி)

*மனது உனை நாடிடாதபடி* - உன்னற்கு உரியவரான உம்மை விரும்பி உணரா வண்ணம் ;

*புலையேன் உலாவி* - அற்பனான அடியேன் அலைந்து திரிந்து ;

*மிகு புணர்வு ஆகி* - பெரும் போகியாய் ;

(புகழ்... அருள்வாயே !)

*புகழ் ஆன பூமி மிசை* - புகழ் நிறைந்த இப் பூவுலகில் ;

*மடிவாய் இருத வகை* - மடங்கி முடங்கி (பொலி வழிந்து) மரித்துப் போகாதபடி ;

---

**முன்னமறி தெய்வமெனும் முன்னோர் பலர்சொன்ன**
**நன்னூற்கள் எல்லாமே நாயகநீ தந்ததுவே**

பொலிவு ஆன பாதமலர் அருள்வாயே - (உமது) அருளமுகு உடைய திருவடித் தாமரைகளை அருள்வீராக, (எ - று).

## விரிவுரை

நாரம் - நீர்; அதன் நிறமுற்றூர்: அதனுல் திருமால் நாரணர் என்னும் பெயர் பெற்றூர். மூல காரண முதல் வரில் ஒருவராய், ஆதி நாரணர் என ஆனூர். அசத்தியத்தை அழித்து, நீடித்த சத்தியம் நிலை நிற்க அடிக்கடி அவதரிப்பவராதலின், நிசு நாரண ஆதி என நின்றூர்.

பெருமித நிலையினரான இவர் பெற்ற மகளிர் இருவர். இவர்கள், வாழ்விக்கும் அன்பின் வடிவினர். தவம் நிறைந்து தர்மம் வளர்த்த தாய்மாமன் தந்த மகளிர் இருவரை மணந்தவனே என்பார், 'மருகா' என்றூர். 'திருமருக' என்பதால், நாரணர் திருமகள் இருவரின் நலம் சிறந்த மருகனே எனவும் இடமுண்டு.

உள்ளத்தில் நிறையும் இன்பக் கிளர்ச்சியை, உல்லாசம் என்பர்.

> " உல்லாச நிராகுல யோக இதச்
> சல்லாப விநோதனும் நீ அலையலையோ "

எனும் கந்தரநுபூதியையும், அதற்கு எளியேம் எழுதியிருக்கும் உரையையும் இங்கு எண்ணிக்கொள்வது நலம் தரும்.

மாபெரும் திருமால் மாமனு ரானுல், மருகர் உல்லாசம் மரபுதானே!

## போதப் பெருநிதி

நினைவு அலைகள், விறுவிறு என்று மனத்தி லிருந்து விளைகின்றன. அதைச் சிறிது அறிந்தால், பெருகிய ஆத்திரம் பிறக்கிறது. எங்கே அந்த கொடிய மனம்? விடுவதில்லை அதனை என்று, பயனுன அறிவு அம் மனத்தைப் பார்க்கிறது.' அவ்வளவில், மனச் சேட்டை அழிகிறது. இப்படி அறியும் அறிவு, இத்தனை நாள்

---

**காரியத்தைக் கண்டவர்கள் காரணத்தை எண்ணினரேல்**
**பூரணனுர் ஆட்சிசெயும் பொற்பதனை ஓர்வாரே**

ஏமாந்தது ஏன்? அந்த அறிவினைச் சிறிது ஆயும் பொழுது, புதிய செய்திகள் பல புலனாகின்றன. வினைகள் அறிவை வீழ்த்தின. அந்நிலையில் மனம் ஆட்சி செய்தது. இதனால், மேலும் வினைகள் விளைந்தன. அருளாட்சி இப்பொழுது அறிவைச் செலுத்த, ஆண்டவனால் விளக்கம் அடைகிறது அறிவு. பேரான தெளிவு இப்படிப் பிறக்கிறது. இப்படி, அறிவிலிருந்து மென்மேலும் அறிவிக்கும் அது, 'மிகு நிகழ் போதம்' எனப்பெறும்.

போதத்தின் மேலிடம் பரம்; பரத்தின் மேல் இடத்தில் மணமகனான முருகன். இவ்வளவு பொருளும் வெளியாக,

" மிகுநிகழ் போதமான முருகோனே "

என்பது, என்ன அற்புதமான அறிவிப்பு!

" வேதாவை இவ்வணம் விதித்ததேன் என்னில்,
உன் வினைப்பகுதி யென்பன்; அந்த
வினைபேச அறியாது; நிற்க, இவை
மனதால் விளைந்ததால்; மனதை நாடில்,
போதமே நிற்கும்; அந்தப் போதத்தை நாடிலோ,
போதமும் நிலைவிளக்கம்;
பொய்யன்று; தெய்வமறை யாவுமே நீயென்று
போக்குவரவு அற நிகழ்த்தும் "

எனும் தாயுமானார் பாடல், இங்கு நம் நினைவில் எழுந்து நிழலிடுகின்றது அல்லவா!

நிதி - (பிரணவ) செல்வம். ஞான போத நிதி என மாற்றிப் பொருள் கொள்ளல் மரபு.

" நின்ற சிவம் ஒன்று; அதனைத் தேர்தல் ஞானம்;
நிகழ் போதம், தேர்ந்ததனைத் தெளியல்ஆம் "

என்பது திருவாதவூரடிகள் புராணம்; இது, சிவபிரான் மாணிக்க வாசகர்க்குச் செய்த வாசக தீட்சையில் வந்த பாடல்.

இதன்படி அமைதியுடன் ஆய்ந்து சிந்திக்கும் அறிவு, ஞானம் எனப் பெறும்.

---

மோட்சம் பிறவி முடிந்தபினர் என்றுணர்வேன்;
ஆட்சே பனையில்லை அம்மா நீ ஆள்வாயே

ஐயம் மயக்கம் அறியாமையின்றி, தேர்ந்த அதனைத் தெளிந்து நிற்றல் போதம் எனப் பெறும்.

எனவே, ஞான போதம் என்பது, தேர்ந்து தெளிதல் எனும் நியதியான பொருளில் நின்றது.

நீடித்த ஞான போதத்தில் கிடைப்பது நிதி. அந்நிதியே பிரணவப் பெருஞ் செல்வம்.

மும்மல கண்டன முதல்வர், ஹரர் எனும் பெயர் பெறுவர். அப்பெருமான் இரு செவியில், ஞான போத நிதி எனும் (பிரணவப்) பொருளை ஓதிய நிபுணன் அந்த ஓம் வடிவன். "நிதி ஞான போதம் அரன் இரு காதிலே உதவு நிபுணே" எனும் அருமையை ஊன்றி உணர்ந்தால் உள்ளம் உருகும்.

## அசுர காலன்

பகலை மறந்தனர். இரவை நினைந்தனர். இருண்ட மேனியர். இருண்ட மனத்தர். இருளில் நடமாடினர். பிறர் உறங்கும் நேரத்தில் கொள்ளை யடித்தனர், கோதையர் பலரை நோதல் செய்தனர். அமரரை அடர்த்தனர். நல் தவ முனிவரை நைய வைத்தனர். ஐயோ முருகா! ஐயோ குமரா! என்று அலறியது உலகம்.

எம்மான் எழுந்தான் வேலை ஏவினன். ஞான சக்தி, அகில உலகும் அளாவி விரைந்தது. அதன் மூலம், அசுர உணர்வு அழிந்தது. இது ஒரு காலம்.

அமைதி உணர்வு எனும் இதய ஒளி, எவரிடமும் இருக்கிறது. பாவ சிந்தனையைப் படபடத்து எழுப்பி, அந்த அருமை ஒளியை அணைத்து விடுவர். அதன் பின் ஆகாமிய வினையை அளவிறந்து எழுப்புவர். இதனால், பீடிக்கும் நோதல் பிறக்கும். இடர் மிகுந்த நிலையில், குமர குமர! முருக முருக! என்று குமுறுவர் பக்த கோடிகள். அந்நிலையிலும், அம்மான் சந்நிதி ஞான சக்தி அளவளாவி வரும்; இடர்ப்பாடு ஒழியும். இன்பம் உதிக்கும்; இப்படி அதிகரிக்கும் அசுர உணர்வை அழிப்பானை, "நிசிசரர் குல காலா" என்னும் அருமையே அருமை.

---

**உள்ளொழுக்கம் இல்லை; உலகர்க் குபதேசம்**
**விள்ளும் எனை நீ விமல அருளுதியோ**

## வழிபட்டோர்

-திசைமாமுக ஆழியரி மகவான் முனோர்கள் பணி
சிவநாதர்'

எனும் வரியில் பிரமன், திருமால், இந்திரன் வழிபட்ட வரலாறுகள் இருக்கின்றன.

முனோர்கள் - முதலினோர்; இம் மிகைச் சொல்லால் ஒரு இரட்சசு, சந்திரன், சூரியன், காமதேநு, இயமன், பிருங்கி, வான்மீகர் முதலினோர் இத்தலத்தில்வழிபட்டதும் எண்ணப் பெறும்; உள்ளம் தொடும் இவ்வரலாறுகளை, ஊன்றி உணர ஒரு காலம் வரும். அப்போது அவைகளை அறிவம்.

## பேறு தரும் பெருமான்

காலன்போல் எழுந்த ஆலம் அயின்ற அமுதேசர் திரு முன், அந்தவிட ஆற்றல் ஒடுங்கி முடங்கி அடங்கியது.

பால குமரனைப் பார்ப்பார் பார்த்தால், அமுதேசரை' அரிய அத் திருவுருவில் அறிந்து மகிழ்வர்.

திருமருகா! உல்லாச! முருகோனே! நிபுண! நிசாசரர் குல காலா! திகழ் பாலா! திருவான்மியூர்ப் பெருமாளே!

தையலர்தம் தனம் கண்டேன்; இடை கண்டேன்; வயிறு கண்டேன்; கண்கள் கண்டேன்; முகங் கண்டேன்; கூந்தல் கண்டேன்; அவர்களைத் தழுவும் ஆசை கொண்டேன்;

இதனால், தெய்வமே! மாபெரும் உன்னை மறந்தேன்; அல்ப அறிவுடையவனாய், உலகில் அலைந்து திரிந்தேன்.

'' புவனியிற் போய்ப்பிற வாமையின், நாள் நாம்
போக்குகின்றோம் அவமே; இந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறு ''

---

கருத்தூன்றிக் கற்றறியேன்; கற்றபடி நின்றறியேன்
விருத்தனிளம் பெண்மணந்த வேதனைபோல் ஆனதுவே

என்று எண்ணிய விண்ணவர் வந்து வழிபடும் புண்ணியம் நண்ணிய புனித பூமி இங்கிலவுலகம்.

புகழ் நிறைந்த இவ்வுலகில் பிறந்த அடியேன், அறிவிலாத இச்சையால் மடங்கி முடங்கி மடியாதபடி, அருள் ஞானத் திருவடி தரிசனம் அருள்க என்று விநயம் மிகுந்து வேண்டியபடி.

வாழ்க திருப்புகழ் வளம்!

---

# 'முனிவர் காட்டிய முதல்வன்'

(சி. குமாரஸ்வாமி)

(பக்கம் 320 தொடர்ச்சி)

(இருவரும் சோலையை விட்டுப் புறப்பட்டோம்)

இன்னும் சிறிது தூரம் சென்றால் முதிர்ந்த குளிர்ச்சியையுடைய கடலும் கலங்கும்படி அதற்குள்ளே சென்று அசுரர் தலைவனை வென்ற நெடிய வேலால், நமது பெருவீரன், இரண்டு பெரிய வடிவையுடைய சூரன் அஞ்சும்படியாக ஆறுவிதமான உருவத்துடனே சென்று, தலைகீழாகக் கவிழ்ந்த பூங்கொத்துகளையுடைய மாமரத்தை (அசுரனை) அழித்த போர்க்களம் உள்ளது. அந்த வழியாகத்தான் நாம் செல்லவேண்டும். அங்கே ஒரு பேய் உள்ளது. அதுவும் நமது வீரனைப் புகழ்ந்து கூத்தாடுகிறது. அப்பேயைக் கண்டு பயந்து விடாதே.

ஆம் சுவாமி, நாம்போர்க்களத்துக்கே வந்துவிட்டோம் போலிருக்கிறதே. பிணக்குவியல்கள் மேல்தான் நடக்க வேண்டியிருக்கிறது. அதோ தாங்கள் சொன்ன பேய். மிக்க பயங்கரமாகத்தான் உள்ளது. தாங்கள் என்னுடன் இருக்கும்போது என்னை அந்தப்பேய் என்ன செய்யும்?

---

தருவைக் கொடிகள் தழுவுவதுபோல் அடியேன்
மருவியுனை மணப்ப மனங்கோடல் ஓராயோ

தலையோ பரட்டைத்தலை. என்னைக் கண்டு பல மாத மாகியது போலும்! பற்களோ ஒன்றுக்கொன்று மாறு பட்டுக் கோரமாக உள்ளது. பெரியவாய கண்கள் சிவந்து சுழன்று கொண்டே உள்ளன. பார்வையோ மிகவும் கொடூரமாக உள்ளது. பேராந்தையும் பாம்பும் தொங்குவ தால், பாரம் தாங்காமல் பேயின் பெரிய முலையிலே மோது கின்றன பெரிய காதுகள். உடம்போ மிகவும்சொர சொரப் பாக உள்ளது. பயங்கரமாகவும் உள்ளது. இப்பெரிய பெண்ணுருவத்துக்குப் பேயென்ற பெயர் மிகவும் பொருந் தும் சுவாமி! சேச்சே. விரலெல்லாம் ஒரே ரத்தம். அத் துடனேயே, பிணத்தின் கண்களை நுங்குபோல் தோண்டி யெடுத்துவிட்டு, அதன் தலையை வேறு கையிலே எடுத்துக் கொண்டு ஆடுகிறது. இந்தக் காட்சி போதும். இந்த இடத்தை விட்டு இப்போதே போய்விட வேண்டும் சுவாமி'

எனப்பா, அந்தச் சோலையிலே அழகிய பெண்களைக் கண்டதும் மயங்கிவிட்டாய். இப்போது என்னமோ, நடந்து வந்த களைப்பையும் பாராமல் புறப்படு என்கிறாயே. சரி நட

''ஏன் சுவாமி அந்தப்பேய் அவ்வாறு ஆடுகிறது?''

சொல்கிறேன் கேள். நமது வீரனுக்கும் அசுரனுக் கும் நடந்த போரிலே, குவிந்த பிணங்களைப் பேய் ஆகார மாகச் சாப்பிட்டு பசியைத் தீர்த்துக் கொண்டது. அந்த சந்தோஷத்தால், போரில் வெற்றிபெற்ற நமது வீரனை வாழ்த்திக் கூத்தாடுகிறது. அக்கூத்துக்குத் ''துணங்கைக் கூத்து'' என்னும் பெயர் சொல்வார்கள்.

நீ, நான் விரும்பும தலைவனை - வீரனைப் - பார்க்க வேண்டுமென்று என்னோடு வருகிறாய். உள்ளன்போடும் உறுதியோடும் வந்தாயானால், நிச்சயமாக நீ அவனைப் பார்க்கலாம். நீ நினைத்த காரியம் கைகூடும். அவனுடைய உதவியும் கட்டாயம் கிடைக்கும்.

---

உற்றபிள்ளை கண்டே உள்முருகும் தந்தையென
முற்றுவந்தென் முன் நீ முகங்காட்டல் என்றேயோ

பேசிக்கொண்டே இவ்வளவு தூரம் வந்துவிட்டோமே சுவாமி, அண்மையில் ஏதாவது ஊர் இருப்பின், அங்கு சென்று தங்கி இளைப்பாறிப் பிறகு நடக்கலாமே.

இன்னும் சிறிது தூரம்தான். அதோ தெரிகிறதே பெரிய கோபுரம் அதுதான சொக்கநாதப் பெருமாள் கோயில் கொண்ட கூடல்மாநகர்.

கூடல்மாநகர் என்பது மதுரைதானே. மதுரைக்குச் சென்றிருக்கிறேன். ஆனால் ஊரைச்சுற்றிப் பார்த்ததில்லை. பூரா விவரமும கூறுங்கள் சுவாமி.

மதுரை பாண்டியர்கள் தலைநகரம், அவர்கள் வீரத்தில் சிறந்தவர்கள். அதனால்தான் மதுரையின் பெரிய வாயிலின் மேல் மீனக் கொடி பறக்கிறது. அக்கொடியின் அருகில் பந்தும், பாவையும் தொங்குகின்றன நெடுங்காலமாக அவை தொங்குகின்றன. ஏனென்றால், போர் செய்ய விரும்பிப் பகைவர்கள் அந்த வாயிலின் உள்ளே புகுவதன் முன் அந்தப் பந்தையும், பொம்மையையும் அறுத்தெறிய வேண்டும் அவ்வளவு தைரியம் உள்ள பகைவர்கள் பாண்டியனுக்கில்லை அதனால் போரையே அந்த வாசல் கண்டதில்லை.

மதுரைக் கடைவீதி மிகப் பெரியது. லக்ஷ்மிகடாக்ஷம் பெற்றது. அங்குள்ள வியாபாரிகள் அதர்ம வழியில் பணம் திரட்டுவதில்லை. குற்றமற்ற கடைவீதி. கடைவீதியைத்தாண்டிச் சென்றால் பலப பல தெருக்களும், செல்வம் நிறைந்த மாடங்களும உள்ளன. இப்பேர்ப்பட்ட மதுரைமாநகரின் மேற்கேயுள்ள குன்றில்தான் நமது பாராட்டுக்குரிய வீரன் தங்கியுள்ளான். நாம இப்போது மதுரைக்கு வந்துவிட்டோம். நீ சென்று ஊரைச் சுற்றிப் பார்த்து விட்டுவா. நான் இங்கேயே சற்று இளைப்பாறுகிறேன். சீக்கிரம வந்துவிடு.

"சரி சுவாமி"

---

தான்தோன்றி யாகித் தடுமாறிப் போகாமல்
வான்தோன்றி ஐயாளை வாவென் றழையாயோ

"என்னப்பா, நன்றாக சுற்றிப் பார்த்தாயா? சோமசுந்தரக் கடவுளைப் பார்த்து மகிழ்ந்தாயா?"

"தாங்கள் சொன்ன விவரங்களைக் கவனத்தில் வைத்துக்கொண்டு ஊர்பூராவையும் நன்றாகப் பார்த்து மகிழ்ந்தேன். ஆலவாய் அண்ணலையும் தரிசித்தேன். மிக்கமகிழ்ச்சி சுவாமி."

"இங்கிருந்து சற்று தூரத்தில்தான் உள்ளது அந்தக் குன்று. ஆகவே நாம் நேரே அங்குசென்று விடலாம"

"அப்படியே ஆகட்டும் சுவாமி."

. நாம் இப்போது நமது வீரத தலைவனது ஊரில் இருக்கிறோம். இந்த வயலைப் பார்த்தாயா, எவ்வளவு செழிப்பாக உள்ளது. நீர்வளம் மிக்குள்ளதால் வயலில் உள்ள சேறு கருப்பாக உள்ளது.

சேற்றிடையே தாமரை மலர்ந்துள்ளது. வாயவிழ்ந்த தாமரை மலர்களில் வண்டுக் கூட்டங்கள் ஓய்யாரமாகத் தங்கி இருக்கின்றன. மாலைக் காலத்தில் இதழ்கள் மூடிக் கொள்ளும் போது, வண்டுகள் அந்த மலரின் உள்ளேயே தூங்கிவிடும். விடியற் காலையில் மணம வீசும் நெய்தற்பூவை ஊதி, சூரியோதயம் ஆனதும், கண்ணைப்போல மலர்ந்த அழகிய சுனைகளில் உள்ள மலர்களிலே சிறைகளையுடைய வண்டினது அழகிய கூட்டம் ரீங்காரம் செய்யும் குன்றிலே தான் அவன் உள்ளான். அவனுக்குரிய ஊர்களில் இதுவும் ஒன்று.

என்ன ஆச்சரியம்! பேசிக் கொண்டே குன்றின் அடிவாரத்திற்கல்லவா வந்திருக்கிறோம் இயற்கைக் காட்சிகளும் நமது நெடுவழிப் பிரயாணத்தின் சிரமத்தைக் குறைக்க உதவின. இனி நாம் குன்றேறிக் குன்றுடையானைச் சந்திப்போம்.

ஆம் சுவாமி, இந்தநேரத்தில் அவர் இருப்பாரா? எங்காவது சென்றிருந்தால், ஏமாற்றமல்லவா அடைவோம்.

---

வானம் மதியால் வயங்கலென, வள்ளால்நீ
தான் இதயம் வந்(து) அமுதம் தாதாதா தாதாவே

அந்தப் பயம் வேண்டாம். எப்போது நீ அவனைப் பார்க்க வேண்டும் என்று நினைத்தாயோ அப்போதே நீவருவது அவனுக்குத் தெரியும். என்னைப்பற்றி அவனுக்கு முன்னமேயே தெரியும. நீ அவனை விரும்பிப் பார்க்க வருகிறாய் எனறு தெரிந்தபின் அவன் எங்கும் செல்லமாட்டான். உன் தேவைகளை அவன் செய்து முடிக்கக் காத்திருக்கிறான். உன்னைப் போன்ற உறுதியும் அன்பும் உள்ளவர்களையே அவனும் விரும்புகிறான். அதோபார், அவன் தன் கற்புக்கரசியுடன் அமர்ந்திருக்கிறான்.

ஆஹா! என்ன அழகு. அந்த அம்மையும் அதிரூப சுந்தரி. இப்படியல்லவா இருக்கவேண்டும் கணவன் மனைவி என்றால்.

சுவாமி, தாங்கள் என்னிடம் வழி நெடுகிலும் கூறி வந்த அத்தனை அழகுடனும், ஆபரணங்களுடனும் இவர்கள் விளங்குகின்றனர். தங்களுடன் வந்தது என்பாக்கியம் சுவாமி.

அப்பனே! இவன் இங்கு மட்டுமில்லை. இன்னும் பல இடங்களில் பல கோலங்களில் தங்கியுள்ளான். நான் அங்கெல்லாம் போகப் புறப்பட்டேன். நீயும் அங்கெல்லாம வருவதானால் அழைத்துச் செல்கிறேன். இல்லாவிடில் திரும்பி உன் ஊருக்குப் போகலாம்.

எப்படி சுவாமி ஊருக்குப்போக மனம்வரும், இந்தப் பேரழகனைக் கண்டபின்? அவன் எங்கெல்லாம் தங்கியுள்ளானோ அவ்வவ்விடங்களிலும் சென்று கண்டு களித்தபின் ஊருக்குத் திரும்புவோம் சுவாமி.

அப்படியானால் இங்கு சில நாட்கள் தங்கிப் பின் நமது பிரயாணத்தைத் துவக்கலாம்.

(தொடரும்)

---

ஆண்மையினால் நல்ல அமுதால் அறிவால்நின்
கேண்மையினூர் நட்பு கெழும அருளுதியோ

# கீதை காட்டும் பாதை

(அ. ராமமூர்த்தி)

## 10. இல்லறமே துறவறம்

சந்நியாஸ தத்துவத்தை பார்த்தனுக்கு விளக்கியதன் மூலம் பகவான் இல்லறத்தையே துறவறமாக மாற்றிக் கொள்ள முடியும் என்றும் கூறுகிறார். சாதாரணமாக இல்லறமும் துறவறமும் வெவ்வேறு பாதைகளைக் கொண்டவை என்பதுதான் நமது நினைப்பு. ஆனால் கண்ணன் காட்டும் துறவறமோ இல்லறத்தினின்று வேறுபட்டதல்ல. இல்லறத்தில் 'இறையறம்' கலக்குமானால் அது துறவறமேயாகும்.

ஞானத்தில் நிலைத்த எண்ணம் கொண்டவனாய், பாச பந்தங்கள் எல்லாம் அற்று முக்தியில் நோக்கமுடையவனாய் இல்லறம் நடத்துபவன் நிச்சயம் யோகியே யாவான். பகவான் கண்ணனுடைய வாழ்க்கையை விவரிக்கும் ஸ்ரீமத் பாகவதம் இந்தத் தத்துவத்தை இன்னும் அழகாக எடுத்துக் காட்டுகிறது.

துறவியினுடைய வேள்வித் தீயில் பிரம்மமே அர்ப்பணம செய்யப் படுகிறது. அர்ப்பிக்கப்படும் பொருளும், அர்ப்பணம் செய்யும் கர்த்தாவும் எல்லாமான பிரம்ம ஸ்வரூபமே யன்றோ?

எந்த ஒரு தர்மமும் பரப்பிரம்மத்தை ஆஸ்ரயிப்பதையே நோக்கமாகக் கொண்டிருக்குமானால், அது சந்நியாச தர்மத்திற்குச் சமமானதே யாகும்.

தன்னுடைய ஸ்வதர்மத்தையே ஒருவன் பாரமார்த்திக நோக்கத்துடன், செய்யும் தொழிலின் அர்த்தத்தை யுணர்ந்து, பக்தி சிரத்தையுடன், ஈஸ்வரார்ப்பணமாகச் செய்யும்பொழுது அது சந்நியாச தர்மமுமாகிறது.

---

குன்றுமல் தன்மம், குறையாமல் நிற்போற்றி
நின்றுறில் கேண்மை நிகழ அருளுதியோ

இல்லறம் நடத்தும் எவரும் அவர் விவசாயியோ, வைத்தியரோ, உத்தியோகஸ்தரோ, ராணுவத்தாரோ அல்லது வேறு யாராயிருந்தாலும் சரி - தங்களுடைய ஸ்வதர்மத்தைத் தன்னலமின்றி சமுதாயத்தின் பொதுவுடைமையாக்கி - பகவானுக்கு சமர்ப்பிக்கும் மார்க்கம் துறவு மார்க்கமே யாகும்.

செய்யும் தொழில் செவ்வனே செய்யப்பட்டு பாரமார்த்திகப் பொது நோக்கோடு இணைந்தால், அது யக்ஞம் அல்லது வேள்வி என்று சொல்லத் தகும்.

வேதங்களில் சொல்லப்படுகிற பல்வேறு வேள்விகளும், நமது கர்மத்தில் உற்பத்தியானவை தான். எனவே நமது கர்மம் பாரமார்த்திகப் புனிதத் தன்மை பெறும் பொழுது அதுவே யக்ஞமாகிறது.

பொருள்களைச் சேகரித்து, தானதர்மங்கள் செய்து, அக்னியால் ஸம்ஸ்கரிக்கப்படுகிற வேள்வியைக் காட்டிலும், ஞானத்தை அடைவதாகிய வேள்வி மிகச் சிறந்தது. அத்தகைய வேள்வியைச் செய்பவன் எவனாயினும் சரி அவன் துறவியே யாவான்.

உண்மையில் விசாரணையும், உடலால் சேவையும், கடையில் பணிவும் கொண்டு வாழ்பவன் எங்கு எவ்வாறு இருப்பினும் அவன் சந்நியாசி. அவனுடைய செயல்கள் எல்லாம் யக்ஞ காரியங்களே.

ஞானம் என்பது மோன வரம்பு. அதாவது தன்னுடைய யதார்த்த ஸ்வரூபத்தை தானே அறிந்து, உணர்ந்து, அனுபவிக்கும் ஒரு மேலான நிலை. அத்தகைய நிலை பெற்ற ஞானியை மோகம் வந்து அடையாது. ஏன்? காமக்குரோதாதி ஷட்குணங்களும் அவனைப் பாதிக்காது.

தன்னிடத்தும் பிறரிடத்தும் மற்றும் எல்லா உயிர்களிடத்தும் பிரம்மத்தையே காண்பவன் துறவி. அவனுடைய வாழ்க்கையே துறவறம்.

---

தேடரிய மெய்ம்மைத் திருவேதிற் பாடியடி
கூடுகின்றார் நட்பு குலாவ அருளுதியோ

கொடிய பாவங்களைச் செய்தவனுக்கும் ஞானமார்க்கத்தில் விமோசனமுண்டு. சமசார சாகரத்தை அதி விருந்து கொண்டே கடப்பதற்கு ஞானம் ஒன்றே துணை செய்கிறது.

சாதனைகளை அனுஷ்டிக்க வனவாசம் தேவையில்லை. இல்லற தர்மத்தி விருநது அனுஷ்டிக்க இயலாத ஒரு சாதனை வனவாசத்திலே கிட்டிவிடும் என்று அறுதியிட்டுக் கூற முடியாது

பிரம்மத்தை ஆஸ்ரயிக்கும் பிரம்மச்சாரியும், இல்லறத்தானும், வானப் பிரஸ்தனும் உண்மையில் துறவிகளே யாவர். இன்னும் ஆழ்ந்து விளக்கம் கண்டால் துறவறம் என்று தனியே ஒரு ஆஸ்ரமமே கிடையாது என்றும் கூறலாம்.

எந்த ஒரு சிந்தனையிலும் செயலிலும் தீமையானதும் நேர்மையற்றதுமான அம்சத்தைத் துறந்து விடுதலே உண்மையான துறவு மார்க்கம் ஆகும். இல்லறத்தான் அவன் துறக்க வேண்டிய அம்சங்களைத் துறந்து நடத்தும் தர்ம வாழ்க்கையே துறவறம் ஆகும்.

வனவாசம் செய்யும் தனித் துறவியைவிட இல்லறத்தானுக்குப் பாரமார்த்திக வாழ்வுக்கான சந்தர்ப்பங்கள் அதிகம். சந்தர்ப்பங்கள் அதிகம் கொண்ட வாழ்க்கையே சாதனைக்கு ஏற்றதாகும்.

ஞானத் தீயானது எத்தகைய ஆபாசத்தையும் எரித்து பரிசுத்தமாக்கிவிடும். மன அழுக்கைப் போக்க தனி வாழ்க்கையே சிறந்தது என்று எண்ணுவது முற்றிலும் சரியானதல்ல.

பல்வேறு நிலைகளில் அடிபட்டு லட்சிய வாதியான மனிதன் பக்குவம் பெறுகிறான். பரம பக்குவத்திற்கென தனி முயற்சிகள் தேவையில்லை மேலான தர்ம நோக்குள்ள முயற்சிகள் எல்லாவற்றாலும் சேர்ந்து பக்குவம் தானே ஏற்படவேண்டும்.

---

எண்ணியன எய்த இருந்தருளைப் பாலிக்கும்
புண்ணியனே நின்னைப் புணர்வுகொளல் என்றேயோ

ஞானத்தையே சிறந்ததாக மதிப்பவனுக்கு இந்திரிய நிக்ரகம் கஷ்டமேயல்ல. காலக் கிரமத்தில் அது தானே ஏற்படும். பரிபூரண சிரத்தைதான் வேண்டும். சிரத்தையும் ஞானமும் நெருங்கிய தொடர்புடையவை.

சிரத்தைக்கு அடிப்படை நம்பிக்கை. நம்பிக்கை யற்ற மனம் நாசத்தையே கொடுக்கும். நம்பிக்கை யின்றி தெய்வீக சுகம் கிட்டாது.

ஞானம் என்ற வார்த்தைக்குப் பிரமாதமான அர்த்தம் கற்பித்துக்கொண்டு குழப்பமடைய வேண்டியதில்லை. சந்தேகமற்ற நிலைமைக்கு ஞானம் என்று பொருள்.

தெளிவான நிலையே சந்தேகமற்ற நிலை. எனவே ஞானம் என்பது தெளிவு.

பரப்பிரம்மத்தை யன்றி ஏனைய எல்லாம் தெளிவற்றவை என்று ஞானிகள் தாமும் கண்டு நமக்கும் கூறினர். அதையே கண்ணன் பார்த்தனுக்கும கூறினார்.

அங்கிங்கெனுதபடி எங்கும் பிரகாசமாயுள்ள அந்த பிரம்மத்தை ஆச்ரயிப்பதையே நோக்கமாகக் கொண்டு, தர்மமே மனைவியாக, சத்தியமே பொருளாகக் கொண்டு நடத்தும் இல்லறம் வாஸ்தவத்தில் துறவறமே யன்றோ ?

(தொடரும்)

---

# கண்ணுடி

## (V. R. G.)

கற்றோர்க்குக் கண் இரண்டு,
மற்றோர்க்கும் கண்ணிரண்டு.

என்று சொல்வது மிகப் பொருத்தமும் ஞாயமும் ஆகும்: ஏனெனில், உண்மைக் கல்வியைக் கற்றவர்களுக்கே கண்களால் அடையக்கூடிய உதவியும், நன்மையும் உண்டாகும்.

---

வேண்டுநர்க்கும் வேண்டார்க்கும் வேறுபா டில்லாமல்
காண்தகவான், தன்னைக் காட்டுவதும் ஓர்வேறு

உண்மைக் கல்வியைக் கல்லாதவர்களுக்கு இந்தக் கண்கனால் ஒரு நன்மையும் முன்னேற்றமும் ஏற்படுவதில்லை. இதற்குப் பதிலாக இந்தக் கண்களே அவர்களை, அவசியமோ, நன்மையோ இல்லாத விஷயங்களில், சிக்க வைக்கக் கூடிய கண்ணி ஆகிறது.

கண்ணி என்பது பக்ஷிகளையோ, மிருகங்களையோ பிடிப்பதற்காக உபயோகிக்கும் வலையாகும். ஒரு பாவமும் அறியாத பக்ஷிகளையும், விலங்கினங்களையும் அந்தக் கண்ணியானது பிடித்துப் பிணித்து அதற்குத் தீங்கிழைக்கக் கூடிய வேடனிடம் ஒப்புவிக்கிறது.

உண்மைக் கல்வி என்பது என்ன ?

தன்னை, அதாவது மானிட உடலுடன் கூடிய நம்மை, யார் எனவும், நாம் எந்த சக்தியால் ஜீவித்து வாழ்க்கை நடத்தி வருகிறோம் என்பதையும், நம் உடலுள் என்னென்ன சக்திகள் இயங்குகின்றன, அவைகளின் குண விசேஷங்களை என்ன என்பதையும், இவ்வுலகனைத்தையும் படைத்து, வேண்டுவன அளித்து ஆதரித்து வரும் சர்வ சக்தியுடனும் கூடிய ஆண்டவன் ஒருவன் இருக்கிறான் என்பதையும், நமக்கு நன்கு உணர்த்தக்கூடிய கல்விக்கே உண்மைக்கல்வி எனப்படும்.

தன்னையறிந்து பின் தலைவனை நாடு

என்பது ஆன்றோர் வாக்கு. நம்முள் இரண்டு வகை சக்திகளின் கூட்டங்கள் இருக்கின்றன. அதில் ஒன்று நமக்கு நன்மையும், உயர்வும், சந்துஷ்டியும் உண்டாக்கிக் கீர்த்திமானாய் விளங்கச் செய்யும்.

மற்றொரு கோஷ்டி இதற்கு நேர் விரோதமானது. நம் ஆயுள், இளமை, வசதி யாவையும் வீணாக்குவதுடன், நன்மையோ, ஞாயமோ, லாபமோ அற்ற மார்க்கங்களில் நம்மை ஈடுபடுத்தி அவல நிலைக்கு ஆளாக்கிவிடும் !

இந்த இரண்டு கூட்டங்களின் தலைவர்கள் யார் ?

---

அன்புரிமை கொண்டே அணைக்கின்ற நண்பரென
என்புரிமை யானசிவம் எனையீர்ப்ப தென்றேயோ

ஒன்று அறிவு, மற்றொன்று மனது. இந்த இரண்டு சக்திகளின் இயல்பையும், அவைகள் நம்முள் எவ்விதம் இயங்குகின்றன என்பதையும், அதன் குண விசேஷங்களையும், நாம் முன்னதாகவே, அதாவது இளமைப் பருவத்திலேயே அவசியம் அறிந்தாக வேண்டும்.

இளமையில் நாம் கற்கும் நூல்கள் அறிவை விளக்குவதாயும், மனதின் சுபாவத்தை அறிவித்து அதை நல்வழிப்படுத்தி நல்வாழ்வு அடையும் மார்க்கத்தைப் புகட்டுவதாயும் இருத்தல் வேண்டும். மனதை அடக்குவதாலேயே மனிதன் மனிதத் தன்மையை அடைகிறான்!

முதலில் அறிவையும், அதன் பின் மனதையும் அறிதல் வேண்டும். அறிவின் பெருமையை நன்கு அறிந்தால், மனதின் தன்மை தானாகவே தெளிவாகிவிடும்!

அறிவை அறிவதால், உண்டாகும் பலன் என்ன?

அறிவின் இயல்பை அறிந்தவன் நல்ல அறிவாளியாகிறான். அவன் நன்மையும், அவசியமுமான விஷயங்களிலேயே தன் கருத்தைச் செலுத்துவான். தன் எதிரில் தனக்கு அவசியமில்லாத விஷயங்கள் எவ்வளவு கவர்ச்சிகரமாய் விளங்கினாலும், அதில் சிறிதும் தன் கவனத்தைச் செலுத்தமாட்டான். அதைக் கண்ணெடுத்தும் பாரான். அவன் கண்களானது அவன் அறிவு இட்ட ஏவல்களைச் செய்து அவனுக்குத் தோஷமும், நன்மையும் அளிக்கும் நல்ல வேலைக்காரன் ஆகிறது!

உண்மைக் கல்வியைக் கல்லாதவனுக்கு மனதே தலைவனாகிறது. அதன் குண விசேஷங்களைச் சுருங்கச் சொல்லின், அதற்குத் தனக்கென ஒரு ஸ்திரமான கொள்கையோ, நன்மை தீமைகளைப் பகுத்தறியும் சிந்தனை சக்தியோ கிடையாது. தன் மனோபீஷ்டத்தைப் பூர்த்தி செய்துகொள்ள, நம் புலன்களையும், ஆயுளையும், வசதிகளையும் தன் இஷ்டப்படி உபயோகித்துக் கொள்கிறது!

இங்கிலையில் அதன் கண்களுக்கெதிரில் நூதனமும் கவர்ச்சியும் நிறைந்த விஷயங்கள் தென்படுமாயின்,

---

அழகுரிமை கொண்ட நினை ஆதரத்தால் காதலித்துப்
பழகுமெனை நீமுருகா பற்றுவதும் என்றேயோ

அதனால் அதற்குத் தீமையே விளையுமென்பது தெளிவு. கண்களின் உதவியால் அது இன்னலையே அடைகிறது!

ஆதலால் ஆண்டவன் நமக்கு உவந்தளித்த கண்களை, நம் அறிவிற்குப் பணியாளனாய் அமர்த்துவதாலேயே நமக்கு மட்டற்ற மகிழ்ச்சியும் இகபர சௌக்யமும் உண்டாகும்?

நாம் ஆண்டவன் திருக்கோயிலை அடைந்து அவன் சன்னிதியில் வணங்கி நின்று பார்க்கும்பொழுது, நம் தூலக் கண்களின் உதவியால் ஆண்டவன் திவ்ய அலங்கார தெரிசனமும், அவன் கண்ணிறைந்த காக்ஷியும் நம் மனதைப் பரவசப் படுத்துகிறது. அதே சமயம் சன்னிதிக்கு நேர் எதிர் திசையில் நோக்கினால், பெரிய நிலைக்கண்ணாடியில் ஆண்டவனின் திருவுருவம் அங்கும் காக்ஷியளித்து மகிழ் வூட்டுகிறது!

ஆண்டவனின் திருக்கோயில்களில் சன்னிதிக்கெதிரில், நம் முன்னோர்கள் காலத்திலிருந்து ஆண்டவன் திருவுருவம் அதனுள்ளும் காக்ஷியளிக்கும் வண்ணம் பெரிய நிலைக் கண்ணாடிகளை அமைத்திருக்கிறார்கள். இதில் நாம் அறிந்து கொள்ள வேண்டிய உண்மைத் தத்துவங்கள் அநேகம் இருக்கின்றன!

நாம் அகமும் புறமும் ஏககாலத்தில் ஆண்டவனை தெரிசித்து மகிழ்வெய்த வேண்டும் என்பதை நமக்கு ஞாபகப்படுத்தவே, சன்னிதிக்கெதிரில் நிலைக் கண்ணாடிகளை நம் முன்னோர்கள் அமைத்திருக்கிறார்கள்.

நம் தூலக் கண்களால்சன்னிதியிலும், நிலைக்கண்ணாடியிலும் ஏககாலத்தில் ஆண்டவனைத் தெரிசிக்க முடியாது. நம் கண்களானது ஒரு சமயம் ஒருபக்கம் பார்க்கக் கூடும். நம் தூலக் கண்களால் நாம் ஆண்டவனை தெரிசிக்கும் சமயம், தூய்மை நிறைந்த நம் ஹிருதயமாகிய கண்ணாடியிலும், நம் அறிவெனும் கண்ணின் உதவியால் ஆண்டவன் திருவடிவத்தை உள்ளே நிறுத்தி தெரிசித்து அடிதொழுது, அருள் உணர்வு மிகுந்து பரவசமாகி, அவன் வடிவுடன் கலந்து மகிழவேண்டும் என்பதை உணர்த்துகிறது.

---

மினுக்கிப் பகட்டுகின்ற மேற்பூச்சு காட்டாமல்
உனக்கேஆள் ஆக்கிஎனை உகப்பிப்ப தென்றேயோ

நிலைக்கண்ணாடியின் மேல் பக்கம் கீறல்கள் இன்றி மிக மழமழப்பாய் இருப்பினும் அதன் உள்பக்கம் பாத ரசம் நன்கு பொருந்தியிராவிடின் எந்த உருவமும் அதில் தெரியாது. அதேபோல நாம் வெளித்தோற்றத்தில் எவ்வளவு தெளிவானவர்களாகக் காணப்பட்டாலும் நம் ஹிருதயமாகிய கண்ணாடியானது தூய்மையிழந்து பழு துற்றிருந்தால் ஆண்டவன் திருவுருவத்தை அங்கு அறி வெனும் கண்ணால் காணமுடியாது என்பதையும் தெளி வாக்குகின்றது. என்னே! நம் முன்னோர்களின் கருணை!

கல்லாமனத்துடன் நில்லா மனத்தவ
கண்ணாடியில் தடம் கண்ட கோவே!

என்றார் கருணைக்கடலாகிற அருணகிரி வள்ளல். தமிழ் வேத முடியாகிய திருவள்ளுவர் திருக்குறளில்,

கண்ணுடைய ரென்பவர் கற்றோர்; முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்

எனக்கூறி நாம் உண்மைக் கல்வியைக் கற்கவேண்டியதின் அவசியத்தைத் தெரிவித்திருக்கிறார்!

---

# உபநிஷதங்களின் உள்ளொளி

(சிவானந்த விஜயலக்ஷ்மி)

## 1. முன்னோட்டம்

பழம் பெருமை படைத்தது பாரத பூமி. இதன் பண் புக்கு ஆதாரமானது பழமையான வேதங்களே. சனாதன தர்மமான ஹிந்து மதத்தின் பல கிளைகளான அத்வைதம், விசிஷ்டாத்வைதம், த்வைதம் போன்ற தத்துவங்களைப் போதிப்பவரும், சூரியன், கணபதி, குமரன், சிவன், விஷ்ணு, சக்தி போன்ற தெய்வங்களைவழிபடும் ஷண்மதஸ் தரும் வேதத்தையே தமது ஆதார நூலாகக் கருதுகின்ற

---

னர். தத்தமது கருத்தை வலியுறுத்தத் தக்க பிரமாணங்களை, மேற்கோள்களை, இதனிடத்திருந்தே எடுத்துக் காட்டுகின்றனர்.

ஹிந்து மதத்தின் ஆணிவேராக விளங்கும் இந்நூலை இயற்றியவர் யார்? அல்லது, இதனை யார் கூற யாரால் எழுதப்பட்டது? இது ஒரு தனி மனிதனின் படைப்பா? அல்லது பல உள்ளங்களின் எதிரொலிகள் கலந்த பெரும் நூலா? இதுபோன்ற கேள்விகளுக்கு விடை கூற இயலாது. ஆனால், ஹிந்து மதத்தின் ஆதாரமெல்லாம் தானே தோன்றிய மறையான இவ்வேடத்தில்தான் உள்ளது. ஆதியும் அந்தமுமில்லா அருட்பெருஞ்சோதி இறைவனைப்போல, வேதமும் ஆதியும் அந்தமுமற்று விளங்குகிறது.

ருக், யஜுஸ், சாம, அதர்வணம் என்று நான்கு வேதங்கள் உள்ளன. ஒவ்வொரு வேதத்திலும் இருபிரிவுகள் இருக்கின்றன. கர்மகாண்டம், ஞானகாண்டம் எனும் அவைகளில், முதற்காண்டம், ஸ்தோத்திரங்கள், வைதிக, லௌகீக, தெய்வீக கர்ம, வழிபாடு. இவைகளைச் செய்வதற்கு உரிய உபதேசங்களும், மனிதன் இயற்ற வேண்டிய கடமைகளை வலியுறுத்தும் கட்டளைகளும் கொண்டுள்ள இரண்டாவதான ஞான காண்டத்தில், பரம்பொருளை அறியும் ஞானம், தத்துவப் பொருளின் தன்மை போன்ற நிரந்தரத்துவமும் முக்யத்வமும் வாய்ந்த உயர் பொருட்கள் உபதேசிக்கப் படுகின்றன. அவைகளே உபநிஷதங்களாகும்

வேதகாலமே இந்திய சரித்திரத்தில் மிகப்பழைய காலமாகும். அக்காலத்தைத் தொடர்ந்து இந்நாட்டிலே ஒரு சிந்தனைக் காலம் வந்தது. வேதகாலத்தில் மக்கள் பெரும்பாலும கர்மத்தில் யாகம், யக்ஞம் போன்ற புறச் செயல்களில் மிக ஈடுபட்டு, கர்மத்தால் கிட்டும் பலனை, பதவியைப்பெற ஆவலுற்றிருந்தனர். சத்கர்மத்தின் பய

---

உள்ளப்பண் பில்லாதார் உறவு தவிர்த்தென்னை
மெள்ள அடி நிழலில் மேவுவிப்ப தென்றேயோ

ளுய் ஆனந்தம் நிறைந்த நீண்ட பூரண ஆயுளையும், வாழ்க்கையில் பலவிதமான அனுபவங்களையும், சுவர்க்க பதவியையும் அடைய அவாவுற்றனர். ஆனால், அதைத் தொடர்ந்த உபநிஷதக் காலத்தில், மக்கள் சிந்தனை வயப் பட்டு, அறிவினைக் கொண்டு ஆராய்ச்சி செய்பவராய், தம் முன் இருக்கும் தனிப்பொருள் யாதெனத் தேடும் தத்துவ தரிசிகளாய், ஆத்மீக அனுபவங்களையே தமது ஆதார ஜீவ னைக் கருதும் அத்யாத்ம தீரர்களாய் வாழ்ந்தனர். அவர் களது ஆராய்ச்சியின் பயனாக, அத்தீரர்களின் சித்தம் எனும் தயிரை, சிந்தனை எனும் மத்தால் கடைந்ததன் பய னாக, உபநிஷதம் எனும் என்றும் கெடாத, பரிசுத்தம் நிறைந்த வெண்ணெய் திரண்டுவந்து மக்களுக்குக் கொடுக் கப்பட்டது.

உபநிஷதம் வேதத்தின் பிரதான பாகமாக விளங்கு கிறது. தத்துவ உபதேசம் நிறைந்த இப்பெரும் ஞான நூல் மக்களுக்குச் சிறந்த வழிகாட்டியாக அமைகிறது. கிறிஸ்து தோன்றுவதற்குப் பல்லாயிரம் ஆண்டுகளுக்குமுன், இந் நாட்டிலே வாழ்ந்த தீர்க்கதரிசிகள், தத்துவ ஞானிகள், தம்முள் உணர்ந்த - கேட்ட - தெய்வக் குரலின் திருவாக் குகளைப் பலரும கேட்குமாறு வெளியிட்டனர். அம்மஹா புருஷர்களின் தியான காலங்களில் உதித்த அத்திவ்ய உப தேசங்கள் வெறும் வரட்டு வாய்ப்பாடமாக (சூத்திரமாக) அமையாது, மனிதனது அன்றாட வாழ்க்கையில் அனு பவித்து அறியக்கூடிய அனுபவ உபதேசங்களாக, என்றும் மாறாத உண்மைத் தத்துவங்களாக இருக்கின் றன. பார்க்கும் பொருளி லெல்லாம் நீக்கமற நிறைந்துள்ள பரிபூரண வஸ்துவைக் காணுதற்கும், தன்னுள்ளேயே தானாகி நிற்கும அத் தத்துவ வஸ்துவை உணர்தற்கும் அவை வழி காட்டுகின்றன. மனிதனது அறிவு எத்தனை உயரச் சென்று, எதை உணர்ந்து, எதைச் சுட்டிக் காட்டும் என்பதைக் காட்டுவதற்கு, உபநிஷதம் சிறந்த அத்தாட்சியா

---

பூவில் மணம்போல் பொலியப் புகுந்தருளால்
தாவி முருகனைத் தத்பதத்தால் ஆளாயே

கிறது. அறியும் ஆத்ம தத்துவமே அனைத்திலும் மேம்பட்ட மெய்ஞான தத்துவம் என்பதை அஃது உணர்த்துகிறது.

பொதுவாகக் கூறுமிடத்து, உபநிஷதங்களைப் படிக்கையில் நமக்கு ஒரு புத்துணர்ச்சி, நூதன அனுபவம் கிட்டுகிறது. ஆம், நாம் இவ்வுலகில் இருப்பதில்லை. கரணங்கள் கழன்று, மனம் மாய்ந்து, உடலுணர்வு ஓய்ந்து, ஆத்ம அனுபவங்கள் நிறைந்த வேறொரு உலகில் சஞ்சரிப்பது போன்ற உணர்ச்சி நமக்கு ஏற்படுகிறது. ஆத்ம விசாரம், உண்மைப் பொருள் ஆராய்ச்சி (சத்-தரிசனம்) எனும் ஆழ்ந்த செயலில் ஈடுபட்டு, நம்மையும், உலகையும், அதன் பொருட்களையும், பொருட்களால் ஏற்படும் குணபேதங்களையும் மறக்கும் நிலை கிட்டுகிறது. உபநிஷதத்தைப் போன்ற உத்தமமான,உன்னதமான கருத்துக் குவியலை, உலகில் வேறெந்த நாட்டிலும், வேறெந்த மதத்திலும், வேறெந்த நூலிலும் காண இயலாது. அது காட்டும் கதாபாத்திரங்கள் வேறுபட்ட குணநலம் வாய்ந்தவர்கள். ஆனால் எல்லோரும் ஒரு பொருளைப்பெற ஆசை கொள்கின்றனர். ஆம்- உலகிலுள்ள எல்லாப் பொருட்களையும் பெற்றிருந்த போதிலும், நம்மை, நமது ஆத்மாவை இழந்து விடுவோமாயின், நாம் எதைப் பெற்றதாக எண்ணக் கூடும்? குறும்புக்காரச் சிறுவன் நசிகேதஸ், தந்தையற்ற சத்யகாமன், வீராங்கனை காரகி, ஆத்மீக வாழ்க்கையே சிறந்த வாழ்க்கை என்று அதைப்பெற ஆசைகொண்ட மைத்ரேயி, அனைவரும் பாடுபட்டது ஒரு பொருளுக்காகத்தான். ஆம்-ஆத்மாவை அறியவே அனைவரும் ஆசைகொண்டு முயன்றனர்.

உபநிஷதம், கீதை போன்ற நூற்கள், அவற்றைப் படித்த மஹாயோகி அரவிந்தர், சுவாமி விவேகானந்தர் போன்ற பெரியோர்களுக்கு நல்வழிகாட்டிகளாக விளங்கியதுபோல, அவற்றைப் படிக்க நேரிடாத பகவான் ஸ்ரீராம

---

தவத்தைமேற் கொள்ளாமல் தன்னை யலங்கரித்தல்
சவத்திற்குச் செய்யும் சதுராவ கண்டேனே

கிருஷ்ண பரமஹம்ஸர், மஹரிஷி ரமணர் போன்ற மகான்களின் அனுபவங்களிலும் மிளிர்ந்தன. இதிலிருந்து உபநிஷதம் அனுபவத்தையே கூறும் நூல் என்பதும், பக்தி நம்பிக்கை, உறுதியுடன் இதனைப் பின்பற்றும் சாதகர்கள் அனைவருக்கும் இது ஓர் பொது உடைமை என்பதும் நமக்குத் தெள்ளெனத் தென்படுகிறது.

'உபநிஷதம்' என்னும் சொல்லுக்குப் பொருள் யாது? பணிவுடனும், பக்தியுடனும் பக்கத்தில் அமர்ந்து கேட்பது என்று அச்சொல்லுக்குப் பொருள் அமைகிறது! இதைக் கூறுகையில், அருளே வடிவான ஆசாரியர் அருகே அடக்கமே உருவான மாணாக்கன்—சீடன்—அமர்ந்து கேட்கும் காட்சி, நம் கண்முன் எதிரே தோன்றுகிறதல்லவா.

இரகசியமான உபதேசம் எனும் மற்றொரு பொருளும் இச்சொல்லுக்கு உண்டு. ஆம் இவ்வுபதேசம்பெறத் தகுதிவாய்ந்த மாணவனுக்கு—அதிகாரிக்கு—மாத்திரம் அவனது சுய அனுபவத்திற்கென அளிக்கப்படும் உபதேசம்தானே!

ஏழாம் நூற்றாண்டின் (சரித்திர ஆராய்ச்சியாளரின் கூற்றுக்கு இணங்க) மாபெரும் உபதேசகரும் ஆசாரியருமான ஜகத்குரு சங்கர பகவத் பாதர் இதற்கு மற்றொரு பொருள் கூறியுள்ளார். 'இறையறிவு' என்று இதனை அழைக்கிறார். எவ்வறிவு அஞ்ஞானத் தளைகளை அறுத்து, அழியாத ஆனந்த அநுபவமான விடுதலையை (மோக்ஷத்தை) அளிக்கிறதோ, அதுவே பரம்பொருளைப் பற்றிய அறிவாகும்' என்று அவர் பகருகிறார்.

உபநிஷதம் ஹிமாலயம் போன்ற மலையல்ல; கங்கை போன்ற நதியல்ல; அல்லது பிரமிடுகள் போன்றதுமல்ல. இருப்பினும், அந்தி தோன்றி பல்லாயிரம் ஆண்டுகள் கழிந்திட்ட போதிலும், இன்னும் மறையாது. ஆனால் புது மணத்துடன், அன்றுபோல் இன்றும் விளங்குகிறது. கற்

---

நீறணிந்த கோலம் நிறைதவமாம்; வான்மதியோ(டு)
ஆறணிந்தான் அன்னவரை ஆண்டானென் றோர்ந்தேனே

பனைக் குவியலாகவும், எண்ணங்களின் கொத்தாகவும்
விளங்கும் இந்நூல், இத்தனை காலம் எவ்வாறு பாதுகாக்கப்
பட்டுள்ளது என்று நோக்குமிடத்து நமக்கு வியப்பே ஏற்
படுகிறது. (கலைச் செல்வங்களான இறைவனின் திருக்
கோயில்களைப் பழுது பார்க்கவும், பாதுகாக்கவும் இன்று
அரசாங்கம் ஒருசில முயற்சியேனும் எடுத்துக் கொண்டுள்
ளது. ஆனால் நமது இந்தியக் கலாச்சாரததிற்கும் பண்புக்
கும் ஆதாரமான வேதத்தையும், இதிகாச புராணங்களை
யும் பாதுகாக்க அஃது இதுவரை நடவடிக்கை ஏதும்
எடுக்கவில்லை. இது வருந்தத் தக்க விஷயம். இனியாவது
இதுகுறித்து யாரேனும் முயலுவார்களா?) உபநிஷதங்
களைப் படித்த பெருமக்கள் அவைகளிடத்து தாம்கொண்ட
அன்பாலும், அவற்றினிடத்திலிருந்து ஆத்மப் பயன் பெறு
தற்கும், ஆவலுடன் அவற்றைப் பாதுகாத்துள்ளனர்.
ரோஜாச் செடி ஒன்றுக்கு இயற்கையில் வித்து இருந்து,
அது வளர்ந்து பெருக வசதியில்லாத போதிலும், அதனி
டத்து முட்கள் நிறைந்திருப்பினும், அது தரும் அழகிய
மணமுள்ள மலர்களுக்காக மக்கள் பாடுபட்டு, அதனைப்
பதியம் வைத்து, பயிரிட்டுப் பாதுகாத்து வளர்ப்பதுபோல,
உபநிஷதங்கள் தரும் உத்தமமான, உண்மையான, ஆத்ம
அனுபவம் எனும் மலருக்காக, மக்கள், அதன் கடினமான
நடை, நிர்குண ப்ரம்மத்தைப் பற்றிக் கூறும் சிக்கலான
விளக்கம், இவற்றைப் பொருட் படுத்தாது அவற்றை
இன்றுவரை பாதுகாத்துள்ளனர். இனியும் பாதுகாப்பார்
கள் என்பதில் ஐயமில்லை.

உபநிஷதம் காலத்தின் கைகளால் அழிக்கப் படாத
தற்கு மற்றொரு காரணமும் உண்டு. அதன் வாசகங்
களும், உபதேசங்களும், லாபகமான எண்ணம் கொண்ட
மதாபிமானிகளால் தங்கள் தனித்த பயனைக் கருதிக் கூறப்
படவில்லை. மேலும் அவைகள் இதயத்திலிருந்து ஊற்றெ
டுத்த உத்தம உபதேசங்களேயன்றி அறிவின் அட்டகாச

---

அருவியெனப் பாய்ந்து வந்தே அம்மான் அருட்கடலில்
மருவி மகிழ் ஞான மகவுதிப்ப தென்றேயோ

மல்ல. அதில் காணப்படும் நடை, எளிமையான, செயற்கை (போலி) வேடமற்ற முறையில் குழந்தைகள் ஒருவருடன் ஒருவர் பேசுவதுபோல, பிறரை நோகச் செய்யும் எண்ணமற்று, தான் வெற்றி பெற்று, தனது கருத்தை ஸ்தாபிக்க வேணும் எனும் சிந்தையற்று, பிறரை மாற்றித் தன்வழிப்படுத்த வேண்டும் என்னும் கருத்துமற்று அமைந்துள்ளது மேலும், அன்றாட வாழ்க்கையில் வரும் சம்பவங்களை உதாரணமாகக் காட்டி, அதைக் கொண்டு பரம்பொருள் இது எனச் சுட்டிக் காட்டும் தனித்தன்மை உபநிஷதத்திற்கே உரித்தானது. உலகம் தோன்றினது முதல் இருக்கும் நிரந்தரமான கேள்விகளுக்கு அது மிக எளிய முறையில், சாவ சாதாரண முறையில் விடையளிக்கிறது ஒவ்வொரு மனத்திலும் எழக்கூடிய சந்தேகங்களை கேள்வியில் கொண்டு, அதறகேற்ற மறுமொழியும் பகரும் இந்நூலின் சம்பாஷணை அனைவருக்கும் பயன்படக்கூடியதாகும். வேறுபடுத்தி நுகர முடியாத பல மலர்களின் மணம் கமழும் காட்டைப்போல, உபநிஷதத்திலும் பல கருத்துக்கள் கலந்த கதம்ப மணம் கமழ்கிறது.

ஆதிகாலத்தில் எத்தனை உபநிஷதங்கள் இருந்தன என்று திண்ணமாகக் கூறுவதற்கில்லை. ஆனல் இன்று அவைகளில் நூற்றெட்டு காக்கப்பட்டுள்ளன. அவை அனைத்தும் சிறந்த கருத்துக்கள் நிறைநதவைகளாய், பல தரப்பட்ட நடையில், (உரைநடையாகவும், செய்யுட்களாகவும், வினு விடையாகவும், நாடகக் காட்சிகள் போலவும்) பல பாங்கில் அமைந்துள்ளன. ஆனல் இவைகளை எழுதிய ரிஷிகள் தங்களைப்பற்றிய ஒரு குறிப்பேனும் அவற்றில் வெளியிடவில்லை—ஏன்—அவற்றை எழுதிய ரிஷிகளின் பெயர்கூட கூறப்படவில்லை. நாம ரூபமறற பிரம்ம வஸ்துவைப் பற்றிக் கூறிவந்த அம்மஹரிஷிகள், தங்களது நாமத்தை ஒரு பொருட்டாகக் கருதி அவற்றில் கூறாது விட்டிருப்பார்கள் போலும்! பரம்பொருளைப்பற்றிய ஞான

---

கனிவாம் உயிரில் கலக்கின்ருன் தன்னை
இனியாம் தழுவி இன்புறுவ தென்றேயோ

உபதேசம் ஒன்றே அவர்களது குறிக்கோளாய்—ஒரே எண்ணமாக—இருந்ததால், தாங்கள் யாரென்பதையே வெளிக்காட்டாது, மறைத்து உபதேசித்தனர் போலும்!

முன்கூறிய 108 உபநிஷதங்களில், பதினாறு உபநிஷதங்களை ஆசாரிய சங்கரர் முக்கியமாக எடுத்துக் காட்டுகின்றார். வேதத்தின் முடிவாக,—வேதாந்தமாகக் கருதப்படும் தத்துவ அனுபவத்தைக் கூறும் மூன்று நூற்களாக—ப்ரஸ்தானத்ரயம் என்று—பகவத்கீதை, உபநிஷதம், பிரம்மசூத்திரம் ஆகிய முப்பெரும் நூற்களைக் கருதுகின்றனர். இவற்றுள் பிரம்ம சூத்திரத்திற்குப் பாஷ்யம்—உரை—எழுதுகையில் ஆதிசங்கரர் ஆறு உபநிஷதங்களிலிருந்து பல மேற்கோள்கள் காட்டியுள்ளார்.

இது தவிர, பத்து உபநிஷதங்களுக்கு—கதா, ஈஸா, கேன, ப்ரஸ்ன, முண்டக, மாண்டூக்ய, தைத்ரீய, ஐதரேய, சாந்தோக்ய, ப்ரஹதாரண்யகங்கட்கு அவர் உரை எழுதியுள்ளார். (தொடரும்)

# ஆறுபடை வீடுகளின் தத்துவ அமைதி

(திருப்புகழ் சதுரர் சே. த. ராமலிங்கம் பிள்ளை, B. A., B. T.)
திருச்செங்கோடு

ஐந்தாம் படை வீட்டில் அமைந்த தலங்களுள் திருச்செங்கோடும் ஒன்று. இந்தத் தலத்தின் ஆலயம், மலையில் சுமார் இரண்டு மைல்கள் நடந்த பின் அடையத் தக்கதாய் அமைந்துள்ளது.

## பெயர்க் காரணம்

ஆதிசேடனோடு போட்டியிட்ட வாயுவினால் மேருவின் சிகரங்கள் பெயர்த்தெறியப்பட்டன. அவற்றில் ஒரு சிகரத்தைச் சேடன் அழுத்திப் பிடித்தபோது, அதன் தலையும்

---

அழியா விழுமம் அழகா யொளிமிகுந்த
விழியாளைச் சேர்ந்தின்ப வியனாவ தென்றேயோ

கிழியுமாறு அச் சிகரத்தை வாயுதேவன் வேகமாய் வீசி ஞன். அப்போது அச் சிகரம் அதன் இரத்தந் தோய்ந்து செந்நிறமாய்ப் போய் விழுந்தது. ஆகவே, அதற்குச் 'செங் கோடு எனப் பெயர் வந்தது. இதில் வானுறவோங்கிய கொடிகள் கட்டிய மாடங்கள் நிறைந்திருந்தமையால், 'கொடிமாடச் செங்குன்றூர்' எனவும் பெயர் பெறும். இங் குத்தான் நமது திருஞான சம்பந்தர் திருப்பாடல் அருளி நளிர்ச்சுரம் நீக்கினுர்.

## பாம்பின் தொடர்பு

இம்மலை ஆதிசேடனது ரத்தந் தோய்ந்தது. இதனுல் பாம்பின் தொடர்புடையது. இதில் சுமார் அறுபது அடி நீளமுள்ள பாம்பின் உருவம் கல்லில் அடிக்கப்பட்டுள் ளது. இங்கு இதற்கு வழிபாடுகளும் நடக்கின்றன. பசு வின் உருவங் கொண்டது பசுமலை எனவும், ஆனையின் உரு வங் காட்டுவது ஆனைமலை எனவும், அன்றில் என்ற க்ரௌஞ்சப் பறவையின் உருவில் இருந்த ('குருகு நாமப் பெயர்க்குன்றம்') மலை க்ரௌஞ்ச மலை எனவும் வழங்கி யதுபோல, பாம்பு படுத்த உருவம் போலிருக்கும் இம்மலை நாகமலை, நாககிரி, சர்ப்பகிரி, புஜங்கோத்திரி என்ற பல பெயர் கொண்டுள்ளது.

## சிறப்புக்கள்

இத்தலம் முருகபிரானது குன்றுதோருடலைச் சார்ந் தது மட்டுமன்றிக் கொங்கு நாட்டுச் சிவ ஸ்தலங்களில் ஒன் ருகவும் அமைந்துள்ளது. இங்குள்ள கோயிலில் வேறெங் கும் காணமுடியாத 'அம்மையப்பராகிய, (பாதியோர் பெண்ணுருவான) அர்த்தநாரீசுவரர் வெண்மையான திரு வுருவுடன் மூல விக்கிரமாகக் காட்சி யளிக்கிருர். மேலும் அவரது திருவடியில் ஆகாய கங்கை உள்ளது. அம்மலையில் செங்கோட்டு வெற்பரான செவ்வேளும் வெண்மையான மூல மூர்த்தியாய் எழுந்தருளியுள்ளார். இந்த நாகாசல வேலவரைக் காண நாலாயிரங் கண்ணில்லையே என்று மிக வருந்திப் பாடுகிருர் புகழ் நாவலர்.

---

நீர்மையொடு சீர்மை நிகழும் நிமலன்தாள்
வார்மை பெறத்தழுவி வாழ்வுபெறல் என்றேயோ

### சேவலின் சிறப்பு

முருகவேளின் திருக்கரத்தில் முடியை எட்டுமாறு அமைந்துள்ளது கொடி. அதில் பதுமன் என்ற சூரன் சேவல் வடிவிலே உள்ளான் என்பது மரபு. இத்தலத்தில் சேவல் கொடியில்லை. சேவல், சேந்தனது இடைக்கு நேராக வைக்கப்பட்டி கடி அஸ்தத்தில் உள்ளது. காரணம், மேலே உயர்த்தப்பட்ட கொடியில் எழுதியிருந்த சேவல், ஆறுமுக னது அடி மலரையும் தரிசிக்க விரும்பியது. மேலே உயர்ந்த வர்களைத் தாழச் செயவது முறையல்ல. ஆதலால், இடை யிலேயே இருந்து தரிசிக்கச் செய்ததாகக் கூறப்படுகிறது. இக்கருத்து வலியுறவே நமது செவ்வேளுறையும் செங்கோடு நோக்கி வந்திருந்த அருணகிரியார் வழித்துணையாக 'கந்தா' என்றதும், பெருமான் வேலுடன் சேவல் கொண்டு வந்த னர் என்பர்.

"சென்றே இடங்கள் கந்தா எனும்பொழு(து)
செஞ்சேவல் கொண்டு வரவேணும்" (திருப்)
"மகாடவியில நிற்பதோா சகாயக்காரனும்" (வகுப்பு)
"பயந்ததனி வழிக்குத் துணை வடிவேலும்
செங்கோடன் மயூரமுமே" (அலங்காரம்)

என்ற வாக்குகளால் அறிக.

### தத்துவ நுட்பம்

இத் தலத்தைப்பற்றி நம் அருணகிரியார், தாம் அரு ளிய பாடல்களில் சிறந்த தத்துவக் குறிப்புக்களை வைத்துப் பாடுகிறார்.

மக்களில் ஒன்றுவிட்டு ஒரு கிளைக்குத் தாவும் குரங்கு போல் மனம் உடையவர்களும், பிடித்த பிடியை விடாத கரடி போன்ற பிடிவாதக்காரர்களும் உண்டு. இவ்வித பக் குவமுடைய மக்கள் திருச்செங்கோட்டிற்குச் சென்றால், துள்ளும் மனமும் முரட்டு மனப்பான்மையும் மாறிப்போய் பேரின்பப் பெருந்துயில் கொண்டு அமைதியுறுவர். இக் கருத்தை அந்தத் தலவளச் சிறப்பு கூறுவார்போல,

"திண்கோ டரங்கள் எண்கோடு உறங்கு
செங்கோ டமர்ந்த—பெருமாளே"

என்கிறார்

---

**கண்கைகால் ஆகிக் கனியும் உறுப்பனைத்தும்**
**அண்ணல்நின் சந்நிதியில் அர்ப்பணித்தல் என்றேயோ**

விலங்கினங்களாகிய இவற்றை விட்டு, ஓரறிவுயிரும் என்ன உண்மையைக் காட்டுகின்றது என ஆராய்வோம்.

**சாலிப் பயிரும் கோலக் கஞ்சமும்**

சாலி என்பது நெல், கஞ்சம் என்பது தாமரை. ஒன்று உடலுக்கு உரம் ஊட்டுவது; மற்றொன்று கண்ணுக்கு அழகூட்டுவது. ஆனால் இரண்டும் ஈரங்கலந்த சேற்றிலே முளைப்பன. நீர்வளமுள்ள தென்பதை நீரில் முளைக்கும் (தாமரை) பூவில் அறியலாம். நிலம் வளமுள்ளதென்பதை நன்கு விளையும் நன்செய்ப் பயிரான நெல் அறிவிக்கும். இங்குள்ள தாமரை முருகனது தெய்வக் கஞ்சத் திருவடியைக் குறிக்கும். நெல் விளையும் நிலம் மக்களது இதயத்தைக் குறிக்கும். சேறு நிறைந்த நிலத்தில் இருவேறு பொருள்கள் ஒன்றாய் முளைக்கின்றன. தாமரையாகிய முருகனது திருவடி ஈரமுள்ள அன்பரிதயத்தில் முளைக்கும். வரண்ட பாலைவயிலோ திரண்டு உருண்டுள்ள பாறையின் மேலோ முளைக்காது.

"திணியான மனோசிலைமீது உனதாள
அணியார் அரவிந்தம் அரும்புமதோ" (அநுபூதி)

எனவே திருவடித் தாமரை முளைக்கும் அன்பர் இதயம் ஈரமானது. எனவே அவர்களது அன்பில் ஒரு பகுதி இறைவனைத் தேடுகிறது. அதே சேற்றில் முளைத்தது செஞ்சாலி அது உணவு முதலிய நுகர்வுப் பொருள்களைக் குறிப்பாய் உணர்த்துவது. ஆதலின் அதே இதயத்தைப்பற்றிய அன்பு இரை தேடுவதிலும் இருக்கிறது. இவை இரண்டும் ஒன்றாய் முளைப்பதால் திருச்செங்கோட்டு மக்கள் இரை தேடுவதோடு நின்று மாக்களாய் விடாமல் இறை (கடவுள்)யையும் தேடி மக்கள் பிறவியின் பயனைப் பெறுகிறார்களாம். இறைவனை வழிபடாவிடில் மக்கள் விலங்கினங்களைவிட எவ்வகையில் மேன்மையானவர் என்று டெனிஸன் (Tennyson) என்ற ஆங்கில கவி கூறினார்:

"For what are men detter than beasts. If they lift not their hands of prayer for themselves and for those who call them friends."

---

தேக போகம் வழுவித் தேவே நின் றே(டு.) அடியேன்
ஏக போகங் கொண் டின்புறுவ தென்றேயோ

அதனால்தான் இரையையும் இறைவனையும் ஒழுங்கு தேடும் நன்மக்கள் வாழ்கிறார்கள் என்பதை,

"செஞ்சொலி கஞ்சம் ஒன்றாய் வளர்ந்த
செங்கோடு அமர்ந்த—பெருமாளே"

குணசீலர்

கொங்கு நாட்டினதாகிய இத்தலத்தில் உடலை வளர்க்கத் தமிழாசிரியராய் வாழ்ந்தும், உயிரை வளர்க்க செங்கோடனை வாழ்த்தியும் தம் காலத்தை நடத்தி வந்த குணசீலரை வாதில் வெல்ல வந்த நெல்லை ஆழ்வார் திருநகரி பிரதிவாதி பயங்கரனை, முருகவேள் மாடு மேய்ப்பான்போல் வந்து ஓர் பாட்டுப் பாடி ஓட்டிவிட்ட கதை முன்னர் அமிர்தவசனியில் வந்துள்ளது. ஆதலால், உடலுக்கு உரிய வாழும் வழியும், உயிருக்கு உறுதியான உய்யும் நெறியும் குறுகி (குன்றி) துயர்தரும் போதெல்லாம் முருகவேள் ஆடல் செய்தலின், இத்தலமும் குன்றுதோறாடல் வரிசையில் வைக்கத்தக்கது.

தேவிதாசர்கள் 22

# இராமசாஸ்திரர்

## (ரசபதி)

## பீடப்பெருமிதம்

தருக்கு நிறைந்தவன் தட்சன். அவன்மகள் தாட்சாயணி. வீணன் அவனைத் தேவி வெறுத்தாள். அவன் மகள் என்பதை, தன் திருமேனி எவர்க்கும் அறிவிக்கின்றது. மாபெரும் அந் நாம ரூபத்தையே மாற்ற நினைத்தாள். அதனால், எழுப்பிய தீயில் அம் மேனியை இட்டாள்.

சித் கலையின் உருவம், சிவபரம் பரையின் திருமேனி. திருமேனி தீயில் சேர்ந்தது; கலை சிவத்தில் கலந்தது

உலக உய்தியை, திருமால் உடனே உணர்ந்தார். விமல சிவத்திடம், அது குறித்து விண்ணப்பித்தார்.

பொய்யுணர்வு நீங்கி மிளிர் பொன்னனை ஞானமெனும்
மெய்யுணர்வை மேவ சிவம் மேவுவதும் என்றேயோ

இரக்கம் கொண்டான் எம்பிரான். கனம் தங்கிய சித் கலையை, பேறு தரும் சக்தி பீடங்களாக, தக்க பல இடங் களில் சிவபெருமான் தாபித்தார்.

இதுவரை நுணுகி அறியப் பெற்ற அப்பீடங்கள் நூற்றெட்டு. இப்படிப் பிரமகலைகள், பேறுன சக்தி பீடங்கள் என்ற பெயர் பெறுகின்றன. அவைகளுள் ஒன்று, அஸ்திநு புரத்தில் இருக்கின்றது. இனிய அது, ஜயந்தி பீடம் எனப் பெறும்.

## உதய பரிதி

வெற்றி தரும் அப் பீடத்தில், கருணை ஆட்சி நடத்து கிறார் ஸ்ரீ காமாட்சியார். அத் தேவியை, சுத்த மனத்தொடு ஆராதித்தவர் சுக்ஞான சுநுர். சுநுர் என்பது, விஸ்வ கர்மரில் ஒரு பிரிவு. இவர் தேவி பெயர் ஞானபாய்.

இவர்கள் தம் இல்லற நல்லறத்தில், பிறந்தது ஒரு பிள்ளை. நல்ல ஒரு நாளில், பெற்றோர் பிள்ளைக்கு இராம சுநுர் என்று பெயரிட்டனர். மதிபோல் வளர்ந்த மகவிற்கு, நலம் சிறந்த உபநயனம் நடந்தது. வைதிக சடங்குகள் வளர்ந்தன. கலை ஞானம் பிள்ளைக்குக் கைவந்தது.

## வேத போதம்

இராமசுநுர், ஸ்ரீகாமாட்சி திருவடியில் கருத்தைப் பதித்தார். காலம் தவறாது ஆலயம் செல்வார்.

திருவருட் செல்வமே தேடத் தகுந்தது. கனிவு தரும் அதுவே, ஆன்மாவிற்குக் கை கொடுக்கும். மற்ற செல்வம் மங்கும் மறையும். இருக்கும் வரைக்கும் இறுமாப் பளிக்கும்.

மனமே! இதை நீ மறவாதே! என்று, தனக்குத் தானே சொல்லிக் கொள்வார். இளமை முதல் இந்த நிலை.

## உலக ஆதரம்

தந்தை வயோதிகத்தால் தளர்ந்தார். மீன் குட்டிக்கு நீந்தக் கற்பிக்க வேண்டுமா! அதுபோல், தந்தையின் தொழிலைத் தானே அறிந்தார். அவரினும் இவர் அதில் வல்லவ ராயினர்.

---

**இருளகற்றும் மெய்யின்பம் இன்றுதா வாழ!**
**மருளகற்றூர் போற்றும் மணியே மணியேயோ**

தொழில் முறையில், நல்லார் எவரும் அவரை நம்பினர். தாராளமாகத் தங்கம் தருவர். எவர்க்கும் அவர்மேல் நம்பிக்கை அதிகம். மாற்று குறையாது. எடை தடை படாது. உரைத்த கெடு தவறாது. கொடுத்த மனம் குதூகலம் அடைய, வேலைப்பாடு நகையில் விளங்கும். கூலிக்குமேல், எவரும் வலிந்து கொடுப்பர். வாங்க மறுப்பர் இந்த வாய்மையாளர். அப்படியும் வருவாய், அளவின்றி இருக்கும். குடும்பச் செலவு மிகவும் குறைவு. மிச்சப்படு பொருளை, வலிந்து அடியவர் மடியில் இடுவர். ஏது இது? எதற்கு இது? என்பார்க்கு, கலகல நகைதான் கண்ட பதில்.

## கோமகன் ஏற்பு

அஸ்தினாபுரத்தை அன்று ஆண்ட அரசர், ஒரு இஸ்லாமியர். நவாப் பாதுஷா என்ற அளவில், அவர் பெயர் அறியப் பெறுகிறது.

வேந்தர் தேவி, புதிய அணிகளை விரும்பினள். அரசர் உடனே அமைச்சரை அழைத்தார்.

விஸ்வ கர்மரில் சிறந்தவர் யார்? ஆரத் திர விசாரித்து, இரண்டொரு நாளில் அறிவியும் என்றார்.

பிரபு! அரண்மனை விஸ்வகர்மர் சுக்ஞான சுனர். அவர் பிள்ளை, அவரினும் சிறந்தார். குடிகள் இப்படி அவரைக் கொண்டாடுகின்றனர்.

அப்படியானால், இன்றே அவர் இங்கு வரவேண்டும். அறிக்கை உடனே அனுப்பும்.

ஆணைப்படியே என்றார் அமைச்சர்.

பகல் மணி பதினொன்று. குதிரடை யிட்டு வந்தது ஒரு குதிரை. இராமசுனர்தம் பணி நிலயத்தில் நின்றது அப் பரி. குதிரை மேல் இருந்தவன் குதித்தான்.

இதயம் இறைவியை நினைந்து நெகிழ, உணவு கொள எழுந்த இராமசுனர், தேவி சகாயம்! தேவி சகாயம் என்று சொல்லிக் கொண்டே, முன் கதவை மூட முயன்றார்.

ஐயா! என்ற குரல்.

---

நீயும் நானும் வேறு நிற்ப தறமேயோ
தாயும்நீ தந்தைநீ தாவுமுளம் காணுயோ

யாரது? பார்க்கிறதோதே, அரச சேவகர் என்று அறிந்தார். பயந்தது மனம்.

என்ன ஐயா! என்ன செய்தி?

அரச சேவகன், அறிக்கையை நீட்டினன். வாங்கினர் பிரித்தார். படித்தார்.

இராமசுனர் அறிவது. உடனே வரவும்! இங்ஙனம் அரசர் உத்தரவுப்படி அமைச்சர்.

காவலர் முத்திரை கண்டதும், ஆரம்பத்தில் அச்சம் பிறந்தது.

அரசர் நம்மை எதற்கு அழைக்கிருர்? எதற்கு அழைத்தால் என்ன? நாம் ஏன் அஞ்ச வேண்டும்! உணவு கொண்டு பிறகு செல்லலாமா? அது சரியல்ல. உடனே வரவும் என்பதுதானே உத்தரவு.

ஒருவேளை உணவில்லையானல் என்ன குடி முழுகியா போகும்? என று எண்ணினர்.

வருகிறேன் ஐயா! இதோ வருகிறேன் என்று, கடையை விட்டு இறங்கினர். கதவைச் சாத்திப் பூட்டினர் அழைக்க வந்த ஆளைத் தொடர்ந்தார்.

தேவி சகாயம், தேவி சகாயம்.........இப்படி அவர் வாய், மொருவியபடியே இருந்தது.

பகல் மணி பன்னிரண்டு. அரசரும் அமைச்சரும், விசாலமான இடத்தில், சிறிது ஏற்றத் தாழ்வான பீடத்தின் மேல் இருக்கின்றனர். அவர்கள் தன்னை எதிர்பார்த்து இருக்கிருர்கள் என்பதை, இராமசுனர் குறிப்பால் அறிந்தார். விரைந்தார். வணங்கினர். உடை ஒதுக்கி, கை கட்டி, வாய் பொத்தி, உத்தரவு என்ருர்.

அவருடைய அமைதி முகமும், விநய நிலையும் காவலர் மனத்தைக் கவர்ந்தது.

இராமசுனர்! எம் தந்தை காலம்வரை, அரண்மனையில், உம் தந்தை அரிய பணி பல செய்தார். எம் காலத்தில் நீர் எதிர் நிற்கிறீர். அரண்மனையில் உள்ள நகைகட்கு அளவில்லை. பயனுடையன எனினும், அவை பழையன.

---

**உயிரின் நிலைவிளங்க உண்மைநிலை தோன்றுமெனத்**
**தயிர்நெய்போல் காட்டுன் தரிசனம தென்றேயோ**

*தங்கம், பத்தரை மாற்றுகவே தருகிறோம். கனந் தங்கிய குடும்ப விருத்திக்குரிய கற்களாகப் பதித்து, விரைந்து கொடுத்துவிட வேண்டும்.*

*அப்படியே பிரபு! அப்படியே செய்கிறேன்.*

*காவலர் சமிக்ஞையை, உரியவர்கள் உணர்ந்தனர். ஏராளமான தங்கத்தை எடையிட்டனர். ஏட்டில் அளவை எழுதிக் கொண்டனர். கொண்டுபோம் என்று அரசர் கொடுத்தார்.*

*அன்றே இராமசுனுர், உயர்ந்த எல்லாத் தங்கத்தையும் உருக்கினுர். சிறக்கப் பாகுபாடு செய்தார். அரசர் குறிப் பிட்ட ஆபரணங்களை, செய்ய ஆரம்பித்தார்.*

## தெய்வ வேட்கை

*இரவு மணி எட்டு. வரத சிலை ஆலயத்திற்கு, வழக் கப்படி சென்றுர். தேவ தேவியைச் சேவித்தார். கோமளை யின் கோலம் கண்டு, உருகியது ஊன். பெருகியது உள் ளொளி. அம்பா! என்று அலறினுர்.*

***பொன்னே! பொருளும் மதியும் விழியாப் பொருந்தநின்ற***
***மின்னே! உயிரதில் உள்ளுற வாகி மிளிர்ந்த மேனி***
***அன்னே! நற் கோணங்கள் எதனிலு மேமதி யாட்சிசெயும்***
***தின்னேயச் சேவடி, யென்னகந் தென்றும் திமிர்கின் றதே!***

*என்று நெகிழ்ந்து பாடினுர். கலகல என்று பொழிந்தது கண் மழை அந்த இன்ப வெள்ளத்தில் மிதந்தார். எம் பெருமாட்டியை, திருந்த இருந்து தியானித்தார்.*

*காமாட்சி இதயத்தில் காட்சியாயினள் என்ன இது! எங்கே இருக்கிறேன்? கனவா நனவா காண்பது நான்? ஏரக தேவீ! நிரகமானுய்! தாரக ஒலியே! தயைநிறை ஒளியே! தேவ தேவீ! என்று வீரிட்டுக் கூவினுர்.*

*போதுமடா உன் துதி மொழிகள். மெய்யால் ஒன்றும் செய்யாதார், கையால் ஆயிரம் காட்டுவார்; வாயால் ஆயிரம் வாழ்த்துவார். இப்படிச் செய்ய, அளவில்லாதவர் இருக்கின்றுர்.*

---

தண்ணளியால் ஆன்மா தழைக்கஅருள் பாலிக்கும்
கண்ணே! எனக்கருளல் காண்பதும் என்றேயோ

இந்த ஆலயம், ஜீரண நிலையில் இருக்கிறது. சிறக்கத் திருப்பணி செய்ய வேண்டும். இந்நினைவு உனக்கு இல்லை. உண்மைப் பக்தர்கள் கோடியில் ஒருவர். அவர்களும் அசட்டையானால், அடுத்து வருபவர் என்னை ஆராதிக்க முடியுமா? முடியுமா அ அ அ?

திடுக்கிட்டார். தியானம் கலைந்தது. விழித்தார். வியர்த்தது மேனி. எழுந்தார். மூலஸ்தானம் நோக்கி, ஓடினார்—காமாட்சியைக் கண் குளிரக் கண்டார்.

என்ன புண்ணியம் செய்தேன்! ஆரணி! அகில உலக காரணி! இதயம் புகுந்தாய்! ஆணை தந்தாய்! ஆம். ஆம். உயிர்க்குக் கோயிலாக உடம்பை யளித்தாய்! உள்ளத்தை மூலஸ்தானமாக உருப்படுத்தினை! நுட்பமாக உயிரை அதனுள் நுழைத்தாய்! உயிருள் உயிராய் உயிர்க்கின்றாய்!

புறத்தில் நாங்கள் அதைப் புரிந்து கொண்டதில்லை. அறியுமாறு, உனக்கொரு ஆலயம் எழுப்புதல் வேண்டும். இருளும் வாழ்க்கையில் மருளுதல் கொண்டோம். நினைப் பூட்டுகின்றாயா! நிமல தேவி! என்று அலறித் தொழுது ஆநந்தித்தார். தெளிவு பெற்று இல்லம் திரும்பினார்.

## பணிமுகம்

பூபதி தந்த பொன்னை, சிறிது சிறிதாக எடுத்தார். கோயில் திருப்பணிக்குக் கொடுத்தார். ஸ்ரீ காமாட்சி யார்க்கு, பயனுள ஆபரணம் பல செய்தார். அற்புதமாகப் பிரகாசித்தது ஆலயம். கும்பாபிஷேகம் நடத்திக் குதூகலித்தார். விறுவிறு என்று இவ்வளவும் விளைந்தது.

வேந்தர் தந்த பொன் முழுதும், இப்பணியால் தீர்ந்தது. அணி பல செய்ய மற்றவர் அளித்த தங்கம் மட்டும் இருந்தது. தேவி பூஜை; யோக நிஷ்டை; பக்திப்பாடல்; இவ்வளவே இப்போதைய இவர்நிலை.

---

**பல்லூழி காலம் பயனறியா என்முன் நீ**
**ஒல்லைவா, உய்யக்கொள், ஓங்காரம் ஆனோனே**

## கலகல கலகல

அரசர் அமைச்சர் இருவரும், ஏதோ சிந்தனையில் இருந்தனர். வாயில் காவலன் வந்தான்.

என்ன செய்தி?

பிரபு! வாயிலில் ஐவர் வந்திருக்கின்றனர். பார்த்திபரை அவசியம் பார்க்க வேண்டும் என்கின்றார்.

அரசர் அமைச்சரை நோக்கினர்.

ஏதோ முறையீடா யிருக்கும்; ஐவரையும் உள்ளே அனுப்பு! என்றார் அமைச்சர்.

வந்தவர் வணங்கினர்.

என்ன செய்தி?

சக்ரவர்த்திப் பெரும! தளர்ந்த வயதினர் சுக்ஞானர், தடுக்க முடியாமல் தவிக்கிறார். அவர் மகன் அயோக்கியன். மோசமே மோசம். குடிகளை நாசம் பண்ணுகிறான். வெளுத்ததெல்லாம் பால்போல் விளங்கலாம். ஊன்றிப் பார்த்தால் உண்மை விளங்கும்.

என்ன உளறுகிறீர்கள்! அவனை நம்பி, அணி பல செய்ய, அளவிலாத தங்கம் அளித்தனர் அரசர்.

அடாடா! அப்படியா செய்தி? ஸ்ரீ காமாட்சி கோயில் திருப்பணி; அம்பிகைக்கு ஆபரணங்கள்; திருவிழாக்கள்; இவ்வளவு வசதி எப்படி வந்தது என்று எண்ணினோம். தாங்கள் தந்த தங்கம்தான் இப்படித் தாறுமாறானது என்று, இப்போது அல்லவா தெரிகிறது!

காவலர் மனம் கலகலத்தது.

நீங்கள் யார் என்றார் அமைச்சர்.

பெரும! நாங்கள் பாதகமே செய்யும் அந்த இராம சுனரின் பங்காளிகள்.

ஓ! காய்ச்சலில் கக்கும் கதை!

---

**ஊனம் அகல உவகையகம் சார்ந்தேநீ**
**ஞானவிளக் கேற்றுகின்ற நன்னாளும் எந்நாளோ**

அப்படி ஒன்றும் இல்லை. அடுத்த உறவினர் கூட அறிவிக்கவில்லை என்று, எதிர்காலத்தில் கேள்வி எழுமோ என்று அஞ்சினேம்; அதனால்தான் முன்கூட்டி அறிவிக்க வந்தோம்.

செலவான பிறகுதான் அறிவிப்பதா? யாரடா அங்கே? அதிர்ந்தது அரசர் குரல்.

ஓடிவந்தான் காப்பாளன்.

இந்த ஐவரையும் விலங்கிட்டுச் சிறையில் வை! மற்றைய செய்தி பிறகு என்றார் மன்னர்.

உள்ளது சொன்னேம்; கொள்ளை வந்தது என்று, தலையில் அடித்துக்கொண்டனர் தாயாதிகள்.

மாலை நேரம். முதலான அநுட்டானம் முடிந்தது. கருத்தில் காமாட்சி. நாவில் தேவி நாம ஜெபம். பார்த்திபருக்கு என்ன பதில் சொல்வது? அந்த நினைவே இல்லை. இராமசுனர், புனிதை கோயில் நோக்கிப் புறப்பட்டார்.

நில்லும்! அதிர்ந்தது ஒரு குரல். அமலையை எண்ணும் இதயம், அதை அறியவே இல்லை. போகிறார்; போய் கொண்டே யிருக்கிறார்.

அவமதிப்பாக எண்ணினர் அரச சேவகர். எட்டிப் பிடித்தனர்; இறுக்கிப் பிணித்தனர், இழுத்துச் சென்றனர். வேந்தர் எதிரில் விட்டனர்.

காவலர் அவரைக் கண்டார். பதைத்தது மனம். துடித்தது மீசை. குரூரமான பார்வையில், குருதி கொப்புளித்தது.என்ன செய்தி? அதிர்ந்தது அரசர் குரல்.

இராமசுனர் திருவாய், ஏதோ பேச முயல்கிறது; இல்லை, ஏதோ ஒன்று உள்ளிருந்து பேச வைக்கிறது.

எதுவும் அறியேன். வலித்து ஈர்த்தனர் சேவகர்; வந்தேன்!

- எங்கே நகைகள்?

---

**உண்ணீர்மை யில்லாதேன் உன்னை நினைந் தடிமை**
**கண்ணீரும் கம்பலையும் ஆவதனைக் காணுயோ**

உருவாகின்றன சில; ஆகாதன பல. எல்லாம் அரை குறையாக இருக்கின்றன.

அளித்த தங்கத்தைத் திருப்பி அளிக்க முடியுமா? ஆஹா! தாராளமாகத் தருகிறேன்.

இப்போது இரவு மணி ஏழு. நாளை காலை பத்து மணிக் கெல்லாம், அனைத்தையும் உருக்கி, எடுத்த எடை தவறாமல், கனகம் முழுவதையும் காட்ட வேண்டும்! இப்போது போக லாம்! ஜாக்ரதை என்று அதிர உரைத்தார் அரசர்.

புனிதர் இராமசுனர் புறப்பட்டார். ஊரை விட்டு ஓடாதபடி, காவலர் ஆட்கள் பின் தொடர்ந்து, கண்காணிப் பதையும் கவனித்தார்.

இரவு மணி ஒன்பது. ஆலயத்தை அடைந்தார்; எம் பெருமாட்டி! கா கா கா என்று கதற அறியேன். மாட்சி செய்! என் இதயத்தில் ஆட்சி செய்! விமல தேவி என்று வேண்டுவன் இன்பத் திருவடி நிழலில், அம்பா! இடம் கொடு என்று, அருவிபோல் கண்ணீர் பெருக அழுதார்; இல்லம் திரும்பினார். உணவை மறுத்தார். பாயில் படுத்தார். கண்ணை மூடினார். முக்கண் தேவி! உன்னை முற்றும் நம்பின ஏழை நான்! ஏதேனும் எனக்கு இடர் விளையில், உன்னைக் குறை சொல்லுமே உலகம்? அதை எண்ணினால்தான் மனம் அதிர்கிறது. கண்ணீர் சிந்தினார். இப்படியே கலங்கி யிருந்தார். வைகறையில் எழுந்தார். கடனை முடித்தார். நீராடி அனுட்டித்தார்.

உம். புறப்படும் என்ற உறுமல் ஒலி. திடுக்கிட்டுத் திரும்பினார். அரச சேவகர்கள், எமகிங்கரர்போல எதிரில் இருந்தனர். கண்டார். மனம் கலங்கியது.

குடி மக்கள் நகை செய்யக் கொடுத்த பொன், பகுதி பகுதியாக இருந்தது அல்லவா? அவைகளைத் தொகுத்தார். சிறு பெட்டியில் எடுத்தார். புறப்பட்டார். அரண்மனையை யடைந்தார்.

காத்திருக்கிறார் காவலர். தராசுத் தட்டு அவர் எதிரில் இருந்தது. ஒரு தட்டில் இட்டிருந்த படிக்குண்டும் பளிச் சிட்டது.

---

**ஊன்றிப்பார்ப் பார்கள் உளவறிவ ரென்றமறை**
**தோன்றியெனை என்றும் துளைப்பதனை ஓராயோ**

கொணர்ந்த பொன்னை, இராமசுனுர் அடுத்த தட்டில் கொட்டினர்.

என்ன மோசம்! நாம் கொடுத்தது எவ்வளவு? இவன் கொண்டு வந்தது எவ்வளவு குறைச்சல்?

நொடித்த மன்னர், தட்டுகளை நோக்கினர். என்ன ஆச்சர்யம்! இரு தட்டும் சமமாக எழுந்தன. துலாக்கோலை நோக்கினர். நடு நிலை காட்டியது நாயக முள்.

அப்பா! ஐயோ அப்பா! என்ற அலறு குரல். அப்பா! அப்பா!

திடுக்கிட்ட வேந்தர் திரும்பினர்.

வந்தேன்! இதோ வந்தேன் என்று, எழுந்த வேந்தர் ஓடினர். அரசரது பெண் குழந்தைதான், அப்படி அலறித் தந்தையை அழைத்தது.

என்ன அம்மா! ஏன் இப்படி அலறுகிருய்?

அப்பா! படிக்குண்டின் எதிர்த் தட்டில் பார்! யார் அப்பா அந்த இளங் கோதை?

எங்கே அம்மா! என்ன உளறுகிருய்?

ஐயோ! அப்பா! பாவை அவள் சிரிப்பதைப் பார் அப்பா!

அடடா! என்ன தேஜஸ்! என்ன சௌந்தர்யம்! கருத்தைக் கவரும் காரிகை அவள் யார் அப்பா? எதற்கு அப்பா அவளை எடை யிடுகிறீர்?

என்ன அம்மா நீ சொல்வது? எனக்கு ஒன்றும் தெரிய வில்லையே!

ஐயோ! அப்பா! கண் தெரியவில்லையா? என்ன ஆச்சர்யம்! சிரிக்கிருளே அப்பா! அந்த அம்மா சிரிக்கிருளே!

என்ன அதிசயம்! இப்படித் துடிக்கிருளே! பொய்யா சொல்வாள் புதல்வி? புத்தி தடுமாற்றமா?

எனக்கா? இல்லை இல்லை. உமக்குத்தான் ஏதோ கோளாறு; அதோ பார் அப்பா! திவ்ய மங்களத் தோற்றம்; சூல தண்டம்; பாச அங்குசம்; வீணை, புஸ்தகம்; பேஷ்

---

**மயிரழகும் ஆடை மதிப்பழகும் காணுர்**
**உயிரழகு காணும் உறுதவரென் றேர்ந்தேனே**

பேஷ்! இவ்வளவும் ஏந்திய இளம்பெருமாட்டி! ஐயையோ! தேவி இன்னுமா உம் கண்கட்குத் தெரியவில்லை?

தரணிபர் சினம் தணிந்தது. திகைப்பூண்டு மிதித்தவர் போல் விழித்தார். மகளுடன் விரைந்தார்.

அமைச்சர்க்கு ஒன்றுமே தோன்றவில்லை.

இராமசுனுர்! என்ன இது? என்னமோ சொல்கிறளே என் குழந்தை?

அரசர் பெரும! தங்கள் புதல்வி விழிகட்கு, தரிசனம் ஆகிறுள் எங்கள் பூரண ஆரணி அவளே அகில உலக அன்னை; அவளே எம்மையும் உம்மையும் ஏற்கும் இரட்சகி: கருணை மிகுந்த காமாட்சி.

அப்படியா! என்ன வியப்பு! இந்து மதம் ஏமாற்றம் என்று இருந்தேன். அத் தேவியை நான் அறிய முடியுமா?

தயாபரி! எவரும் உன் குழந்தைகள் அல்லவா! தாயை அறிய சேய் அவாவினுல், மறைந்து நிற்பது மரபாமா? மகள் பெற்ற பேற்றை, மன்னர்க்கும் அருளாயா! மா தேவி! சிதேவி! ஆன்ம நாயகீ! என்று, தொழுத கை தலை மேல் ஏற, இராமசுனுர் துதி செய்தார்.

எம்பிராட்டி, இரக்கம் காட்டினள்.

ஆ! ஹா! என்று அலறினர் அரசர்.

பூர்ணேஸ்வரியின் திவ்ய மங்கள தேஜோ மயமான திருமேனியை, காவலரும் அமைச்சரும் கண்டனர். அவர்கள் இருந்த இடமே, பேரொளி மயமாய்ப் பிரகாசித்தது.

தன் வசம் இழந்த தரணிபர், பரவசம் ஆயினர். அளவிலாது எழுந்த ஆராமையால், கோமள தேவி! என்று கூவினுர். நெடு மரம்போல் எட்டுறுப்பும் நிலம் தோய, விநயம் மிகுந்து வீழ்ந்து வணங்கினுர்.

மந்திரி தன்னை மறந்தார். இந்துக்கள் வழிபடும் தேவி என்பவர் இவர்தானு? என்று, அரச குமாரி குவித்த கைகளால் கும்பிட்டாள்.

---

**உடலழுகைக் காட்டி உருக்குலைத்த மாயைகெட**
**கடலழகாம் உன்றன் கருணைதனைக் காட்டாயோ**

தேவி மின்னல் போல் ஒளி யெழுப்பி, அவ் வொளி நடுவில் உருக் கரந்தாள்.

அங்கம் சிலிர்த்தது. ஆநந்தம் எய்திய அரசர், இந்து மதத்தின் அருமையை அறிந்தார்.

இராமசுனுர்! என் பிறவி உம்மால் ஈடேறியது. அறியாமல் உம்மை அவமதித்தேன். என்னை மன்னியும்! என்று இறைஞ்சினுர்.

அன்பு மொழி ஆயிரம் கூறினுர். இன்று முதல் எமது ஆசார்யர் நீர்!என்று, இராமசுனுரை வணங்கினுர். அம்பிகை கோயிலுக்கு,அளவிலாத மானியங்களை அளித்தார். தட்டில் இட்ட பொன்னை, கொள்ளும் நீர் என்று, அவரிடமே கொடுத்தார்.

அரசே! எம்மதமும், சொருப நிலையில் ஒரே முடிபை யுடையன. அவரவர் மன நிலைக்கும் சூழ்நிலைக்கும் தக்கபடி, சமய வழக்க ஒழுக்கம் சார்ந்துளது. என நிலையில், காமாட்சியையே என் இதயம் கருதுகிறது.

பக்தரே! உண்மை உணர்ந்தேன். காமாட்சி வழிபாட்டில் கருத்துடையேன்; அடியேன் இன்று முதல் ஸ்ரீ காமாட்சி தாசன் என்று அறிவித்தார். அரச குடும்பமே வாழ்விக்கும் தேவியை வழிபட்டது. குடிகளும் அதே கொள்கைய ராயினர். தாயாதிகளும், இராமசுனுர் அருமை யறிந்தனர். அவரால் விடுதலை அவர்கட்கும் கிடைத்தது.

பல காலம் பரையை வழிபட்டதன் பயனுக, இராமசுனுர், ஸ்ரீ தேவியின் திருவடி நிழலில் இன்றும் இன்பம் கொண்டு இருக்கின்றுர்.

வாழ்க தேவி தாஸர்கள்!

---

தன்னை யறிந்தார் தனியின்பம் காண்பரெனல்
உன்னை யறிந்தபினர் அன்றோ உரையாயே

# SPIRITUALITY.

"Sarvam Brahma Mayam, Reh Reh
"Sarvam Brahma Mayam"

Spirituality is the march of the human mind from the separatist individualism to the all inclusive universalism.

The holiness of the march is nothing more than the flavour of bhakti which is in turn the unabated love of God.

The universe represents the fulness Divine and not a speck therein is left in the emptiness of the Divine absence.

The All Pervading, the All Embracing the Omnipresent, the Omniscient, the all Merciful are but the synonyms of the ever Embracing grace of the Lord. Love the Lord of all, the one Lord that inspires the innumerable God forms of varied human cognition. Innumerable as the God forms may be, the residing Lord in them is one and one only. He is the *one* that *ones,* that is, becomes one, with the countless diverse lives and things of the worlds and He is the single only *ONELY*-Resident in this the innumerable residences of life and being.

The One is the abstract nonform and the love for that one is the truest beginning of effective bhakti.

To know the One and to love Him and to feel with Him is the summit of *Spirituality.* As that one fills the universe, your love of Him who is universal must be necessarily *love universal.* The practice of universal love or Bhakti is hence

compassion, service, meditation, song and satsang and an ordered and restrained life.

The realisation of spirituality lies therefore in the all inclusive, the all embracing love and it is through this love alone that limited man can shed the microcosm of individual exclusiveness and sink in the anandha of ecstacy universal and infinite.

Easy lies this path of Bhakti or love. Sweet is its approach. Wonderful is the measure of the gain, as the wandering pilgrim treads on the vehicle of Bhakti drawn by two most dynamic elements of human existence the *heart* and the *brain*. The co-operation of the forces of love-Prema and Gnana, the understanding, is expressed in the puranic terms of Siva and Sakti.

Ritualism is but the ministerial servant.

The effulgence of Love is the Master Lord.

*Thiruppugal mani.*

519

பெருமையிற் சிறுமை, பெண்ணொடு ஆணாய்,என்
பிறப்பு இறப்பு அறுத்த பேரொளியே!

கருமையின் வெளியே! கயல்கணாள் இமவான்
மகள் உமையவள் களைகண்ணே!

அருமையின் மறைநான்கு ஓலமிட்டரற்றும்
அப்பனே! அம்பலத் தமுதே!

ஒருமையிற் பலபுக்கு உருவி நின்றாயை,
தொண்டனேன் உணருமாறு உணரே!

No. 1506
அசோகா
MILD SCENTED
ASOKA
ஊதுவத்தி
நெ. 1506

-520-

Coffee
Ours for Quality
RAW, ROAST OR GROUND
GANESH & CO., (MADRAS), LTD. MADRAS

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள்
நன்மதிப்புப் பெற்ற நகை வியாபாரிகள்
சுவர்ண மாளிகை
A. S. S. M. சோமசுந்தரம் செட்டியார் & Co.
தங்கநகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்
124, தெற்காவணி மூலவீதி - மதுரை
Tel:—"FAITH" Estd:—1924. Phone:—113

## அரிய தெய்வ அருள் நூல்கள்

குக ஸ்ரீ. ரசபதி விரிவுரையுடன்

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீ அருணகிரிநாதர் கந்தர் அநுபூதி | 1 | 0 | 0 |
| ,, 6 திருவகுப்புகள் | 1 | 8 | 0 |
| ஸ்ரீ பகழிக் கூத்தர் திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ் | 2 | 0 | 0 |
| ஸ்ரீ குமரகுருபரர் அருளிய கந்தர் கலிவெண்பா | 2 | 0 | 0 |
| ஸ்ரீ சேரமான் பெருமாள் திருக்கயிலாய ஞானவுலா | 2 | 0 | 0 |
| ஸ்ரீ ஔவையார் அருளிய விநாயகர் அகவல் | 1 | 8 | 0 |
| திருவெம்பாவை திருப்பாவை திருப்பள்ளி யெழுச்சிகள் | 0 | 6 | 0 |
| திருப்புகழ் மாலை (250 பாடல்கள் மட்டும்) | 0 | 12 | 0 |
| கந்தக் கதம்பம் (பாடல்கள்) பல பிள்ளைத் தமிழுடன் | 1 | 0 | 0 |

தேவி தாஸர்கள் (அற்புத வரலாறு) (அச்சில்)
சிவநேயச் செல்வர்கள் ,, ,,
கணபதி பக்தர்கள் ,, ,,
முருகனடியார் ,, ,,

**அமிர்தவசனி காரியாலயம் 54, பந்தர் தெரு, சென்னை-1**

Printed by K. V. Jagannathan at the National Art Press
91, Mount Road, Madras—18